

பாலகுமாரன்
ரூ. 7
மேகலா
சரிகை வேட்டி



# சரிகை வேட்டி



## பாலகுமாரன்

ஆதித்யம் ஹிருதயம் புண்யம் சர்வ சத்ரு வினாஸனம்...

குமுதவல்லி தொடர்ந்து படித்துக் கொண்டு போனாள். ஆனாலும் சர்வ சத்ரு என்கிற வார்த்தை அவள் மனதைத் தொந்தரவு செய்தது. எல்லா சத்ருக்களும் அழியும்படியாக உதவி செய் என்கிறது இந்த ஸ்லோகம். எனக்கு யார் சத்ரு. எனக்கு எத்தனை பேர் சத்ரு.

எனக்கு யார்மீதும் விரோதமில்லை. எனக்கு யாரும் விரோதிகளில்லை. பிணக்கு கொண்டவர்களையெல்லாம் விரோதிகள் என்று சொல்லிவிட முடியுமா. அப்படியென்றால் புருஷன்கூட விரோதிதான். பெற்றவர்கள் கூட விரோதிகள்தான்.

ஆனால் பாவம் ராமருக்கு விரோதிகள் இருந்திருக்கிறார்கள். அவர் மனைவியை அபகரித்து அவர் தம்பியைத் தாக்கி அவரைக் கொல்ல

கூடித்திருக்கிறார்கள். தனி ஆளாய் இருந்தவரை சூழ்ந்து தாக்கியிருக்கிறார்கள். அவருக்கு இந்த ஸ்லோகம் அவசியம். எனக்கு அவசியமா.

நேற்று மாலை அப்பா இந்தப் புத்தகத்தைக் கொடுத்து தினமும் காலையில் படி குமுதவல்லி, இது உனக்கும் நல்லது. உன் புருஷனுக்கும் நல்லது என்று சொல்லிவிட்டு போனார்.

"அவருக்கு ஏதாவது கெடுதல் வருமாப்பா."

"ச்சே..ச்சே. அவனுக்கு ஒன்னும் வராது. அவனுக்கு இப்ப நல்ல பீரியட். உனக்காகத்தான் இதைப் படின்னு சொல்றேன்."

"அப்ப எனக்கு நேரம் நன்னால்லேங்கறயா."

"ஆமாம்."

"செத்துப் போயிடுவேனா."

"செத்துப் போயிட்டா எல்லா பிரச்னையும் முடிஞ்சு போச்சு. சுத்தி இருக்கற மனுஷாளாலே வீண் சண்டை வரும். மனக்கிலேசம் ஏற்படும். வாக்குவாதம் சண்டை வரலாம். மனக்கஷ்டங்கள் உடம்பை பாதிக்கலாம். படுக்கையில் சாய்க்கலாம். எல்லாத்துக்கும் முன்னாடியே பகவானேன்னு காலைப் பிடிச்சுக்கறது நல்லதில்லையா.

என்னைச் சுத்தி இருக்கற உஷ்ணத்தைக் குறைச்சுருப்பான்னு கெஞ்சறது நல்லதில்லையா? உனக்கு நான் கெடுதல் சொல்வேனா. பேசாம இதைப் படியேன்."

"நோய் வருங்கறயா..."

"வரத்துக்கு முன்னால தடுத்துருங்கறேன்."

"என்ன நோய்ப்பா. ரொம்ப நாள் படுக்கைல கிடப்பேனா" குமுதவல்லி கலவரத்தோடு கேட்டாள்.

"நான் அப்படி சொல்லலேம்மா. கோபம், பொறாமை, ஆங்காரம், ஆத்திரம் இதெல்லாமே நோய். இதெல்லாம் இல்லாத இருந்தா உடம்பும் ஆரோக்கியமா இருக்கும்."

"என்னை ரொம்ப அல்பமா நினைக்கறேப்பா."

"நாம மனுஷாதானேம்மா. இன்னிக்கு ஒரு முகம். நாளைக்கு ஒரு முகம். காலைல ஒரு புத்தி. சாயங்காலம் ஒரு புத்தி. பகல்ல ஒரு நினைப்பு ராத்திரி ஒரு கனா. முன்னையும் பின்னையும் அலைஞ்சுண்டுதானே இருக்கோம். திடமா இருக்க முடியலைங்கறதுதானே குறை."

அப்பா பேச குமுதவல்லி யோசனையில் ஆழ்ந்தாள்.

"இதுக்கு போய் இத்தனை விவாதம் பண்ணுவானேன்" குமுதவல்லியின் புருஷன் சங்கரராமன் இடையே புகுந்தான்.

"உங்கப்பா படின்னு சொல்றார். நான் எட்டு மணிக்கு வீட்டை விட்டு கிளம்பின பிறகு உனக்கு ஒரு மணி நேர வேலை இருக்கும். பத்து மணிக்கப்பறம் நீ ஃப்ரீதானே. ஒன்பது மணிக்கு குளிச்சுட்டு பத்து மணிக்கு உட்கார்ந்தா இந்த மாதிரி நாலஞ்சு ஸ்லோகம் படிக்கலாமே. இப்படி படிக்கறோங்கற நினைப்பே சந்தோஷமாக இருக்கும். இப்படி படிச்சா மத்த பிரச்னைல மனசு போகாது.

பதினோரு மணிக்கு சாப்பிட்டுட்டு பன்னெண்டு மணிக்கு கட்டில்ல போய் படுத்துண்டா ஒன்னரை மணிக்கு எழுந்துக்கலாம். ரெண்டு மணிக்கு பசங்க வந்துருவாங்க. அதுகளுக்கு சாதம் போட்டு அரட்டையடிச்சா நாலு மணி.

டிபனைப் பண்ணி இறக்கி வச்சுட்டு முகம் அலம்பி ட்ரஸ் சரி




பண்ணின்டா ஆறு மணி. நான் வந்துருவேன். எனக்கு டிபன் காபி கொடுத்துட்டா அப்புறம் ஒம்பதரை வரைக்கும் டி.வி. பார்த்துண்டிருக்கலாம். பிறகு சோறு பத்து, பத்தேகால் பத்தரைக்கு படுக்கை.

இதைவிட சந்தோஷமான சுகமான வாழ்க்கை என்ன உண்டு."

"இல்லை..எதிரிகளை ஜெயிக்கறதுக்காக ராமருக்கு ஆதித்ய ஹிருதய ஸ்தோத்திரம் அகத்தியர் சொல்லிக் கொடுத்தார். எனக்கெதுக்கு."

"மனுஷான்னு இருந்தா எதிரி இருக்கத்தான் செய்வா."

"எனக்கு எதிரி யாருன்னு கேட்கறேன்."

"நீ யோசனை பண்ணிப் பார்."

"நீங்களா."

"என்னை ஏம்மா வம்புக்கிழுக்கறே" குமுதவல்லியின் புருஷன் கை கூப்பினான்.

"உனக்கு எதிரி நீதான். வாயை வச்சுண்டு சும்மா இருக்காத எதாவது வம்புல மாட்டிப்பியோன்னு உங்கப்பா பயப்படறார்."

"யார்கிட்டே.."

"தெரியலையே."

"நீங்களும் படின்னு சொல்றேளா."

"நீ ஒண்ணுமே பண்ணாம ரொம்ப விட்டேத்தியா இருக்கற ஒன்ன வரை உங்கப்பா ஸ்லோகத்தால அடைக்கிறார். சொல்ல ட்ரை பண்ணு. முடியலைன்னா விட்டுரு."

"அதெப்படி ஆரம்பிச்சா விடக்கூடாது."

"அப்படியில்லை குமுதவல்லி. எங்கேயுமே முரட்டுத்தனமா இருக்காதே. மடக்கி பிடிச்சு இழுத்து ஜெயிச்சுடணும்னு நினைக்காதே. நான் எதுவும் படிக்கறதில்லை. எந்த ஜெபமும் செய்யறதில்லை. ஆனா நான் நிம்மதியா இருக்கேன். ஜபம் பண்ணா சந்தோஷமா இருக்கலாம்னு உங்கப்பா சொல்றார். பண்ணிப் பாரு. சந்தோஷமா இருந்தா செய். இல்லேன்னா விட்டுரு. சந்தோஷம்தான் முக்கியம். ஜபம் இல்லை. உங்கப்பா சொல்ற வழியை ட்ரை பண்ணு. விவாதம் பண்ணாதே."

சங்கரராமன் அமைதியான குரலில் பேசினான்.

"அடடா..என் மாப்பிள்ளைகள்ளயே நீ ஒருத்தர்தான் ஓய் ஞானி. உமக்கு சங்கரராமன்னு பேர் வச்சதை விட சகதேவன்னு பேர் வைக்கலாம். சிலசமயம் எதிரே இருக்கறவாளைத் தூக்கி சாப்பிட்டுறீர். உம்மக்கிட்ட நானே நிறைய கத்துக்க வேண்டியிருக்கு.

"அட போங்க சார்" சங்கரராமன் மெல்லிதாய் சிரித்தான்.

குமுதவல்லியின் புருஷன் சார் என்றுதான் தன் மாமனாரை அழைப்பான். யார் என்ன சொல்லியும் மாற்றிக் கொள்ள மறுத்து விட்டான்.

"திருக்காட்டுப்பள்ளில நான் படிச்ச பள்ளிக்கூடத்துல ஒரு கணக்
வாத்தியார் உங்கப்பா மாதிரியே இருப்பார். அவர் வாத்தியாரே இல்லை
நிறைய பசங்களுக்கு அவர் ஞானத்தந்தை. கார்டியன். எதுல சந்தேக
இருந்தாலும் எதுபத்தி சந்தேகம் இருந்தாலும் அவர்கிட்டே கேட்டுக்கலா
திருக்காட்டுப்பள்ளி மாதிரி ஒரு ரெண்டுங்கெட்டான் ஊரில ஒரு ந
வாத்தியார் கிடைக்கறது எவ்வளவு பெரிய கொடுப்பினை தெரியுமா.
கள்ளாம் அட்டை மாதிரி அந்த வாத்தியார்கிட்ட ஒட்டிக்குவோம். எ
மும் அவர் கூடவே சுத்திண்டிருப்போம்.

அவருக்கு ஊர் எதிர்த்த கரை மருவூர். அணைக்கட்டு தாண்டி

ஓரமா மூணு கிலோ மீட்டர் போனா சின்னோன்டா ஒரு கிராமம் வரும்.
நாங்கள்ளாம் எட்டு மணிக்கே சைக்கிள் எடுத்துண்டு திருக்காட்டுப் பள்ளி
யிலேருந்து அவர் ஊருக்கு போயிடுவோம்.

ஒரு ஆறேழு பேரா போவோம். அவருக்கு சைக்கிள் விடத் தெரியாது.
அந்தப்பக்கம் பெரிசா பஸ் ரூட் கிடையாது."

"என் வண்டில வாங்க சார், என் வண்டில வாங்க சார்னு சைக்கிளை
வச்சுண்டு கத்துவோம். ஒரு பையன் அவருக்காக கேரியருக்கே குஷன்
தைச்சான். ஆனாலும் அவர் ஒவ்வொருத்தர் சைக்கிள்ல ஒவ்வொரு நாள்
வருவார். மருவூர்லேர்ந்து பள்ளிக்கூடம் வர்ற வரைக்கும் பாட்டு பாடிண்டு
வருவோம். தெலுங்குக் கீர்த்தனை, கன்னட பஜன், தேவாரம், திருவாசகம்
சிலசமயம் சினிமாப் பாட்டு, சிலசமயம் கூத்துல பாடற செட்டப் பாட்டு
எல்லாம் பாடுவோம். அத்தனை சந்தோஷமா வாத்தியாரை அனுபவிச்
சோம். பெரிய கொடுப்பினை அது. ப்ளஸ் டூ படிக்கறபோதே தெரிஞ்சு
போச்சு. அதுக்கப்பறம் இன்னொரு வாத்தியார் தேவைப்படலை. புஸ்தகங்
களைப் படிச்சு நிறைய தெரிஞ்சுண்டேன்.

உங்கப்பாவும் அந்த மாதிரி ஒரு வாத்தியார். அதனாலதான் அவரை
சார்னு கூப்பிடறேன். நாங்கள்ளாம் கொஞ்சம் நாட்டுப்புறம். சார்னு கூப்பி
டறது பிடிக்கும். சார்கூட இல்லை. சார்வாள்...சார் அவாள்...சார் அவர்
கள்...அப்படின்னு ரொம்ப ரொம்ப மரியாதையா நாங்க வாத்தியாரைக்
கொண்டாடுவோம். நல்லவேளை கொண்டாடற மாதிரி வாத்தியார் கிடைச்
சார்.

"பதினாறு பதினேழு வயசுல அப்படி ஒருத்தர் கிடைச்சு ஒரு
பக்குவத்துக்கு வந்துட்டம்னா அப்புறம் வாழ்க்கை எளிதா இருக்கும்."

"உனக்கெல்லாம் யாரும் கிடைக்கலை குமுதவல்லி. மயிலாப்பூர்ல
பிறந்து நங்கநல்லூர்ல வளர்ந்து மாம்பலத்துல வாக்கப்பட்டுட்டே. தடார்
தடார் தடார்னு ட்ரெயின்ல போயிட்டு ட்ரெயின்ல வந்து என்ன பேச
முடிஞ்சிருக்கும்."

"வாத்தியார் அவர் வயல்ல நின்னுண்டிருப்பார். அரை கிலோ மீட்டர்
தூரம். திபு திபு திபுன்னு வரப்புல ஓடுவோம். வாத்தியார் அங்க பேசறது
காத்துல அடிச்சு இங்க கேட்கும். குரல் உயர்த்தாம பேசிண்டு வருவோம்.
பேசறது தவிர வேற பொழுதுபோக்கே இல்லை."

"கிராமம் ஒரு நல்ல விஷயம் மாப்பிள்ளை. அதேசமயம் கிராமத்தை
முழுசா அனுபவிச்சவா ரொம்ப குறைச்சல். கிராமத்தை ரொம்ப அனு
பவிச்சதால பட்டணத்துல காலம் தள்ள முடியாது. விட்டா மருவூர் போயிடு
வேளே."

"ஆமா. எனக்கு கடைசி காலம் மருவூர்தான். குறைஞ்சபட்சம் திருக்
காட்டுப்பள்ளிலயாவது போய் இருந்துடுவேன். காவிரில குளிக்கிறதுங்கறது
சுகத்துக்காக இல்லை. அதுக்குப்பேரு தான் குளியல். மெட்ராஸ்ல குளிக்கற
துக்கு பேரு நனையல். உடம்பு நனையறதே தவிர குளிச்ச அனு பவம்
இல்லவேயில்லை."

"நான் இப்ப ஆதித்ய ஹிருதய ஸ்தோத்திரம் படிக்கணுமா வேண்
டாமா" குமுதவல்லி புருஷனைப் பார்த்துக் கேட்டாள்.

"படி. தயவுசெய்து படி. பார்த்த சினிமாவையே பார்க்கறதுக்கு டெவி
போன்ல யார்கூடயாவது வம்பளக்கறதுக்கு, பத்து தேய்க்கற வேலைக்காரி
பக்கத்துல உட்கார்ந்துண்டு அடுத்த வீட்டு ரகஸ்யத்தை தெரிஞ்சுக்கறதுக்கு
இது எத்தனையோ பெட்டர்."

புருஷனும், அப்பாவும் குமுதவல்லியை இரண்டாங்கிளாஸ் குழந்தை




யைப் பார்ப்பது போல் பார்ப்பார்கள்.

அவளைக் கீழே விட்டுவிட்டு கை பனியனும், மேல் துண்டுமாய்
மேல் மாடியில் உலவப் போய் விடுவார்கள். குறுக்கும், நெடுக்கும் நடந்து
கொண்டே நிறைய பேசுவார்கள்.

"ரெண்டுங்கிறுக்குகள். பைசா பெறாத விஷயத்தைப் பொரட்டி
பொரட்டி பேசிண்டிருப்பா. உன் புருஷன் கெட்டிக்காரத்தனத்துக்கு
ஜரோப்பா, அமெரிக்கான்னு போயிருக்கலாம். என்னமோ உள்ளூர்லயே
உட்கார்ந்துண்டு தனக்கு எல்லாம் தெரியும்னு உன் புருஷன் கர்வப்பட்டுண்
டிருக்கான். அந்த கர்வத்துக்கு உங்கப்பா எண்ணை நடவிண்டிருப்பார்."

"கெட்டிக்காரன்னா அது உன் மச்சினன்தான். அவன் பேரென்ன
...வேதமூர்த்தியா. போன வருஷம் உன் தம்பி கல்யாணத்துக்கு வந்திருந்
தானே. நிகுநிகுன்னு என்ன அழகு...என்ன கலர். மொத்த பொம்மனாட்டி
கூட்டமும் அவனையேல்ல பார்த்துண்டிருந்தது. ஒரு மாசத்துக்கு ஒரு லட்ச
ரூபா சம்பளமாமே."

"வீட்டு வாடகை, காருக்கு பெட்ரோல் எல்லாம் கம்பெனியே கொடுக்
கறதாமே. பிட்ஸ்பர்க்ல பெரிய வீடு வாங்கியிருக்கானாமே. பெரிய புல்வெளி
யாம். மூணு காராம். இங்கேருந்து சமையலுக்கு ஒரு பெரியவரைக் கூட்
டிண்டு போய் அவரும் அங்க சௌக்கியமா இருக்காராம். எப்ப வரான்
உன் மச்சினன். இந்த டிசம்பருக்கு வருவானில்லையா."

அவள் அம்மா, குமுதவல்லியின் புருஷனைக் கொண்டாடாமல் அவ
ளது மைத்துனனைக் கொண்டாடுவாள்.

"உனக்கு கல்யாணம் ஆகும்போது அவன் ப்ளஸ் ஒன். அப்புறம்
பி.ச. முடிச்சு அங்க போய் சரசரன்னு முன்னுக்கு வந்துட்டான். பல்
தேய்க்கற பேஸ்ட் பண்ற கம்பெனில கெமிஸ்ட்டா இருக்கானாமே. விதம்
விதமா டூத் பேஸ்ட் கண்டுபிடிக்கறானாமே. மூர்த்தி, மூர்த்தின்னு
வெள்ளைக்காராள்ளாம் கொஞ்சறாளாமே."

"அவன் ஏதாவது வாங்கிண்டு வந்தா எனக்கும் கொடுடி. என்னெல்
லாம் வாங்கிண்டு வந்திருக்கான்னு ஒரு தடவை காமி. அனுபவிக்கறோமோ
இல்லையோ...கண்ணாலயாவது ஒரு தடவை பார்ப்போம்."

அமெரிக்காவுக்குப் போன மைத்துனன் ஆறேழு முறை வந்து போய்
விட்டான். ஆனால் அம்மாவைக் கூப்பிட பயமாக இருந்தது. டெல்லியில்
இருக்கிற பெரிய நாத்தனா
இருக்கிற சிறிய நாத்தனாரும், திருவனந்தபுரத்தில் இருக்கிற பெரிய நாத்தனா
ரும் ஓடி வந்து விடுவார்கள். அவர்களுக்குப் போகத்தான் குமுதவல்லிக்கு
மிஞ்சும். மைத்துனனாய் புரிந்து கொண்டு ஒரு முறை கேட்டான்.

"ஏன் அண்ணா ஒன்னுமே வாங்கிக்க மாட்டேங்கற. நான் என்னென்
னமோ வாங்கிண்டு வரேன். நீ ஒன்னுமே வச்சுக்க மாட்டேங்கறயே."

"எனக்கு இதிலெல்லாம் ஒன்னும் நாட்டமில்லைடா."

"மன்னிக்கு இருக்குமோன்னோ."

"லேசா இருக்கும். ஆனா குறைச்சுக்கோன்னு நான் சொல்லிருக்கேன்.
இதுல மாட்டக் கூடாதுடா. இந்த வருஷம் கொண்டு வருவே. அடுத்த
வருஷம் கொண்டு வருவே. அதுக்கப்பறம் கொண்டு வரமுடியாம போயிடுத்
துன்னா."

"என்ன சொல்றேள்" குமுதவல்லி லேசாய் எரிச்சலுடன் கத்தினாள்.

"இல்லடி. அவனுக்குக் கல்யாணம் ஆயிடுத்துன்னா கொண்டுவர
முடியுமோ முடியாதோன்னு சொல்றேன்."

"எதைச் சொல்றதா இருந்தாலும் சரியா சொல்லித் தொலையுங்கோ

சிறினாள்.
கேட்க தப்பா இருக்கு" குமுதவல்லி மறுபடியும் சிறினாள்.
அண்ணா பொருள்களைக் கேட்பதில்லை என்பதைப் புரிந்து
கொண்டு மைத்துனன் குமுதவல்லியின் இரண்டு குழந்தைகளுக்கும் தலா
இரண்டு லட்ச ரூபாய் வங்கியில் போட்டான். ஐந்து வருடம் பொறுத்து
பூரணமாகும் வைப்பு நிதியாக ஏற்பாடு செய்தான். மாம்பலம் வீட்டை
மாடி எழுப்பி தான் தங்குவதற்காக விசாலமான அறையும் பாத்ரூமும்
கட்டிக்கொண்டான். சமையலறை போல் ஒன்று எழுப்பி தன் நாற்காலி
மேஜை சாமான்களை, தான் கொண்டு வந்த சூட்கேஸ்களை அதில் வைத்து
விட்டு போனான்.

"உங்க ரெண்டு குழந்தைகளும் பிரியாம இருக்கட்டுமே. மாடில ஒருத்
தன் கீழ ஒருத்தன்னு இருக்கட்டுமே. பெரியவன் ஸ்வாமிநாதனுக்கு கீழ
போர்ஷன். மாடில ரகுபதி. உங்க கண் பார்வைலயே குடித்தனம் பண்ணட்
டுமே."

"என்னமோப்பா நீ சொல்றே. நாம ஆசைப்பட்ட மாதிரி நடக்கறதா.
இவா ரெண்டு பேரும் மூலைக்கு ஒருத்தரா போனா பிடிச்சு வச்சுக்கவா
முடியும்."

"அனுப்பாதீங்க மன்னி. மெட்ராஸ்லயே வேலை செய்யச் சொல்
லுங்கோ."

"சின்னவனுக்கு பிட்ஸ்பர்க் போகணுங்கற ஆசை இருக்கே."

"வேஸ்ட். அமெரிக்கால வேலை செய்தா அமெரிக்காலயே தங்கிட
ணும். ஆத்துல ஒரு கால் சேத்துல ஒரு-கால்னு அலையக் கூடாது. அங்கயே
ஒட்டுமொத்தமா போயிடணும். அண்ணா, மன்னி, அப்பா, அம்மா, மாமா,
மாமி எல்லாரும் வந்துடணும். நாம மட்டும் தனியா மாட்டக் கூடாது.
அப்படி தனியா இருக்கறது நரக வேதனை.

சிலசமயம் நொந்து போற மாதிரி, போறும சம்பாதிச்சதுன்னு
அலுப்பு வர்ற மாதிரி ஆயிடும். மெட்ராஸுக்கு போனா தூசு, கூச்சல்,
நாத்தம். அம்பாஸிடர் கார் வாரத்துக்கு ரெண்டு ஊர்வலம். இதுக்கு பயந்
துண்டு அங்கேயே இருக்கத் தோணும்.

காசு மட்டும்தான் மன்னி அமெரிக்கா. அந்தக் காசை சந்தோஷமா
செலவழிக்கணும்னா மெட்ராஸ் தான் வரணும். எனக்கு பாமபே கூட
பிடிக்கலை. சம்பாதிக்கறது ஒரு இடம். சந்தோஷப்படறது இன்னொரு
இடங்கறது ஒரு கொடுமை.

இந்த வீட்ல தூங்க முடியாது. தூங்கறத்துக்கு வேற ஒரு இடத்துக்கு
பத்து கிலோ மீட்டர் தூரம் போகணும்னாக்கா எப்படி இருக்கும் அவனுக்கு
தூங்கறத்துக்காக யாராவது வேற இடம் போவாளா யாரும்."

அமெரிக்க வாழ்க்கை போர் மன்னி. சின்ன வயசிலேர்ந்து அங்க
இருந்துடணும். இருபது வயசுக்கப்பறம் அமெரிக்கா போய் அங்கேயே
இருக்கணுங்கறது ஒரு கொடுமை.

நிறைய பேர் அலட்டிக்கறத்துக்காகத்தான் கிழக்கேயும், மேற்கையுமா
அலையறான். பிட்ஸ்பர்க்ல ஒரு மாமி இருக்கா. டாக்டர் பொண்டாட்டி
ரெண்டு மாசம் நிம்மதியா மெட்ராஸ் போய் இருந்துட்டு வரப்போறேன்"
அப்படின்னு பேசுவோ.

திரும்பி அமெரிக்கா வந்து அமெரிக்கா அமெரிக்காதான்னு அலட்
டுவா. உண்மைல அவளுக்கு ரெண்டு இடமுமே பிடிக்கலை. அந்தப் பயணம்
தான் பிடிச்சிருக்கு.

தெருக்குதான் திரிசங்கு சொர்க்கம்னு பேரு. இங்கயும் அல்லாம, அங்க
யும் அல்லாம நடுவானத்துல கெடக்கா.

மெட்ராஸ்ல வெள்ளமாமே. பேய் மழையாமே. ராயப்பேட்டை
தாண்டி மெட்ராஸ்க்குள்ள போகவே முடியலையாமே. துரைசாமி பாலத்
தில மாரளவு தண்ணி நிக்கறதாமே. நாலூறு டாலர் மதிப்புக்கு போன்
போட்டு அமெரிக்கா முழுக்க பேசுவா. இங்க வந்துட்டா அமெரிக்கா பத்தி
உளருவா.

வில்லேஜ் ரைடர்னு ஒரு கார். ஆறு சியர். பார்க்க சுமோ மாதிரி
இருக்கும். ஆனா சுமோவோட பெரிசு. பின்சீட்டைத் தள்ளி படுக்கையா
பண்ணிண்டு தூங்கிட்டா கார்ல போறோங்கறதே தெரியாது.

எங்க வீட்டுக்கு எலக்ட்ரானிக் டோர். எங்க வீட்ல இருக்கறவாளைத்
தவிர வேறு யாரும் கை வைக்க முடியாது. கை வைச்சா பக்கத்துல இருக்கற
போலீஸ் ஸ்டேஷன்ல பெல் அடிக்கும். ஸ்டேஷன்ல இருக்கற போலீஸ்,
கார்ல இருக்கற போலீஸுக்கு தகவல் சொல்லி ரெண்டாவது நிமிஷம்
என்னான்னு வீட்டு வாசலுக்கு வந்துடுவான்.

இப்படித்தான் எங்க ரெண்டாவது சம்பந்தி விவரம் புரியாத கதவு
திறந்து நிலா பார்க்கறேன்னு வெளிய போயிட்டு நாய் துரத்த குறுக்கும்
நெடுக்கும் ஓடிருக்கார். போலீஸ்காரன் லபக்குன்னு பிடிச்சு குப்புறப் படுக்க
வச்சு விலங்கு போட்டுட்டான்.

அங்கெல்லாம் அப்படித்தான். சந்தேகப்பட்டா விலங்கு போட்டுரு
வான். போலீஸ் ஸ்டேஷன்ல போய் விலங்கு அவிழ்த்தான். அங்க போய்
சம்பந்தி கையக் கைய ஆட்டிப் பேசினாரா மறுபடி விலங்கு போட்டு
மண்டி போட வச்சுட்டான். வீட்டுக்கு வந்து ஒன்னு அழுகை. எங்க காம்ப
வுண்ட் ஆறு க்ரவுண்ட். வீடு ரெண்டரை க்ரவுண்ட். வீட்டுக்குள்ளயே
வாழை மரம் வளர்க்கறோம். முல்லைக்கொடி மல்லிகைச் செடி ரெண்டுமே
வளர்க்கறோம்.

இப்படி இங்க இருக்கற நாழியெல்லாம் அமெரிக்கா பத்தியே பேசுவா.
ஒரு தோட்டக்காரனுக்கு காசைக் கொடுத்து சாவியைக் கொடுத்து
வாரத்துக்கு ரெண்டு தடவை தண்ணி ஊத்த சொல்லியிருக்கோம். ஒரு
தடவை தண்ணி ஊத்தறத்துக்கு இருபது டாலர். ஒரு டாலர் நாப்பது
ரூபா. இருபது டாலர் எண்ணூறு ரூபா.

வாரத்துக்கு ஆயிரத்து அறநூறு ரூபா. இங்க பத்து ரூபா கொடுத்தா
போதும். மிச்சத்துக்கு நல்லதா ஒரு பட்டுப்புடவை வாங்கிக்கலாம்.
நாளெல்லாம் சமைக்கறதுக்கு ஐநூறு டாலர் கொடுன்னு எம்
புள்ளைக்கிட்ட கேட்டு வாங்கிக்கறேன். நான் இல்லேன்னா அவன் ஐநூறு
டாலர் கொடுத்துதானேயாகணும்.

இப்படியே அமெரிக்கா மாமியெல்லாம் பேசி அவஸ்தைப்படரா.
உத்துப்பார்த்தா பாவமா இருக்கும். அமெரிக்காவுக்கு அனுப்ப வேண்டாம்
மன்னி. நான் சொன்னது ஒரு எக்ஸாம்பிள். அண்ணாவால அங்க பத்துநா
தாக்குப் பிடிக்க முடியாது. வேகம்...வேகம்...வேகம்..எதுக்கு இத்தனை
வேகம்னு தெரியாதயே வேகம்.

சனிக்கிழமை கார்த்தால பேய் மாதிரி வண்டி ஓட்டிண்டு இருநூ
கிலோமீட்டர் தூரத்தில இருக்கற பீச்சுக்குப் போய், கருப்புக் கண்ணா
மாட்டிண்டு தூங்குவான். எழுந்து பின்பக்க மணலைத் துடைச்சிண்டு [illegible]
வேகத்துல இருநூறு கிலோ மீட்டர் தாண்டி வீட்டுக்கு வருவான்.

மத்த நாள்ளாம் டையும் பேண்ட்டுமா அலையறதினாலயே அ
க்கு அரை டிராயரோட அலைவான். அம்மணமா அலையறத்துக்கு

சனிக்கிழமை ஞாயித்துக்கிழமை.

நம்ம ஊர்லதான் மன்னி ஒரு பேலன்ஸ் இருக்கு எல்லா நேரத்திலயும் ஒரு வேட்டி ஒரு அங்கவஸ்திரம். குளிரா இருந்தாலும் சரி. வெயிலா இருந்தாலும் சரி. ராஜாக்கிட்ட போனாலும் சரி. சாமிக்கிட்ட போனாலும் சரி இந்த ரெண்டு துணிதான்.

பசங்களை அமெரிக்காவுக்கு அனுப்பாதீங்க. அது நல்லதில்லை. அமெரிக்காவுல ஒன்னுமே இல்லை மன்னி. போய் வாழ்ந்தவாளுக்குத்தான் தெரியும்.

அங்க மக்கள் தொகை கம்மி, மன்னி. அதனால வேலை வாய்ப்புகள் அதிகம்.

அம்பது வருஷம் முன்னாடி. தமிழ்நாடும் அப்படித்தான் இருந்துதுன்னு சொல்றா. மக்கள் தொகை கம்மி. வேலை வாய்ப்பு அதிகம். நாம வேலை செய்யாம ஏமாத்திட்டோம்.

அமெரிக்கால ஒரே ஒரு நல்ல விஷயம். எல்லாரும் உழைப்பாளிகள். உண்மையான உழைப்பாளிகள். நம்ம ஊர்ல அது இல்லை. எல்லாரும் எல்லாத்திலயும், எல்லாரையும் ஏமாத்தறோம்.

மறுபடி சொல்றேன். அமெரிக்கா வேண்டாம் மன்னி. நான் இருக்கும் போது ஒரு தடவை வாங்கோ. வேடிக்கை பார்த்துட்டு திரும்பிடுங்கோ. அது போறும்" மைத்துனன் மிகப் பிரியமாகப் பேசினான்.

குழந்தைகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு எப்படிப் படிக்க வேண்டும் என்கிற முறையை சொல்லிக் கொடுத்தான். கம்ப்யூட்டரின் அவசியத்தை விளக்கினான். அவர்கள் உண்ணவும் உடுக்கவும் ஏகப்பட்டது வாங்கி நிரப்பினான்.

அதிர்ஷ்டவசமாக குமுதவல்லியைச் சுற்றி எல்லா உறவுகளும் மிகச் சரியாக இருந்தார்கள். மிகத் தெளிவாய் இருந்தார்கள். உண்மையாய் இருந்தார்கள்.

அவள் புருஷனின் அன்புதான் அவளை அதிகம் பரவசப்படுத்தியது.

இரும்பு உற்பத்தி செய்யும் கம்பெனியில் ஆய்வு குமாஸ்தா உத்தியோகத்தில் நல்ல சம்பளம் வந்தது. தகப்பன் கொடுத்த வீடும், தம்பி கொடுத்த காசும் அவனைப் பணக்காரனாய் காண்பித்தது.

இது போதும் குமுதவல்லி. கை கால் நன்னாயிருக்கு. நம்ம வீட்ல யாரும் பைத்தியமில்லை. பஞ்சமாப்பாதகங்கள் பண்ற அயோக்கியரில்லை. நாம ஏழையில்லை. பணக்காரா இல்லை.

வருஷத்துல பத்துநாள் சொந்த கிராமத்துக்குப் போய் உட்கார முடியறது.

இதெல்லாம் கொடுப்பினை, குமுதவல்லி. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. இதுக்கு மேல எனக்கு எதுவுமே தேவைப்படலை.

ஒரு பொண் குழந்தை இருந்தா உனக்கு வசதியா இருக்குமோ என்னமோ. ரொம்ப அவசியமா இருந்தா என் தங்கை பொண்ணை வரச் சொல்லி கேட்போம்.

ஆனால் அந்தப் பெண் குழந்தை வர மறுத்து விட்டது. எட்டாவது படிக்கிற பெண் சென்னையில் பாய்ஃப்ரெண்ட்ஸே கிடைக்காது என்று வர மறுத்துவிட்டது.

குமுதவல்லியின் தம்பிக்கு ஒரு பெண் குழந்தை இருந்தாள். அவளைக் கொண்டு வந்து படிக்க வைக்க குமுதவல்லிக்கு இஷ்டமில்லை. தம்பியின் மாமனார் வீடு அதிகம் அலட்டிக் கொண்டது.



"மாயவரத்துல நல்ல பள்ளிக்கூடம் இருக்கும்போது மெட்ராஸ்—மெட்ராஸ்"ன்னு போவானேன். உங்க அத்தை உனக்கு சரியா சாதம் போடுவாளா.. எனக்கு சந்தேகமா இருக்கு" குத்தலமாய் பேசியது.

"அவா அப்படிதான் அக்கா. தங்களுக்கு மட்டும்தான் எல்லாம் தெரியுங்கற ஜாதி. உங்க மச்சினருக்கு ஏதோ பொண்ணு சொன்னாளாம். நீ காதுலயே போட்டுக்கலயாம். அதனால உன்னையும் என்னையும் கொஞ்சம் கடுப்பாதான் பேசறா."

என் காதுபடவே உன் குடும்பத்தை ராயல் ஃபேமிலின்னு சொன்னா. நான் சன்னுன்னு எரிஞ்சு விழுந்துட்டேன்.

ஆமா. எங்கக்கா வீடு ராயல் ஃபேமிலிதான். அவ புருஷன் எது சொன்னாலும் மாட்டேன்னு சொல்றதில்லை. எதிர்த்துப் பேசறதில்லை. உங்க பொண்ணு எழுந்துக்கறதுக்கே ஏழரை மணியாறது. ஏதாவது கோபம் வந்தா சாத்தான் போட்டான்னு சொல்றா. அப்படின்னு சொல்லிட்டேன்.

அப்ப தலைக்கேறின கோபம்தான், இன்னும் அடங்கலை. திருவாரூருக்கு வந்துரு. திருவாரூருக்கு வந்துருன்னு குழந்தையை கூட்டிண்டு போயிடுவா. திருவாரூர்ல ஒரு ஹோட்டல் கூட கிடையாது. நீ வீணா கூப்பிடாதே. உன் வீட்டுக்கு பொண்ணை அனுப்பி வச்சுட்டு தன பொண்ணு உயிரோட திரும்பி வரணும்னு காசு முடிஞ்சு வைப்பா.

பத்து பைசா குத்தகை வராத நாலு வேலி நிலம் இருக்கு. அதை வச்சு ஆட்டம் காட்டறாங்க.

உழறவன் பிச்சை போடற மாதிரி ஏதோ கொஞ்சம் தரான். அதை வாங்கறத்துக்குள்ள நாக்கு தள்ளிப் போயிடறது. எல்லாம் பழைய பெருங்காய டப்பா. எப்பவோ மிராசா இருந்த குடும்பம்.

குமுதவல்லியின் இரண்டாவது தம்பிக்குத் திருமணமாகி ஐந்து வருடங்களாகிறது. இன்னும் குழந்தை பாக்கியமில்லை. இதைப் பற்றிப் பேசினாலே கணவனும் மனைவியும் அப்செட்டாகி விடுகிறார்கள்.

கவுண்ட் கம்மியாக இருக்கிறது என்று பரிசோதனையில் தெரிய வந்தது. விந்து அணுவின் எண்ணிக்கை அதிகரிக்க தம்பி மருந்து சாப்பிடத் துவங்கியிருக்கிறான்.

மூன்று வருடத்திற்கு ஒரு முறை அவன் வேலைசெய்யும் இன்ஷூரன்ஸ் கம்பெனி அவனை இடம் மாற்றிக் கொண்டிருக்கிறது. ஏனோ அவர்கள் இருவரும் மற்றவர் குழந்தைகளைக் கொஞ்சுவதில்லை. தங்கள் குழந்தைப்பேறு பற்றிப் பேசுவதுமில்லை.

எப்போதாவது சென்னை வந்தால் குமுதவல்லியின் புருஷனோடு தனியே ஒரு மணி நேரம் பேசிவிட்டு நேரமாச்சு நேரமாச்சு என்று கிளம்பி விடுவார்கள்.

குமுதவல்லியின் புருஷன் குழந்தைப் பேறில்லாதவனைக் கட்டிலில் படுக்க வைத்து ஆடைகளைத் தளர்த்தச் சொல்லி வயிற்றில் கை வைத்து கண் மூடி சில நிமிடங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அவன் தம்பியோடு அணைத்தபடி மாடியில் உலவினான்.

"நிச்சயமா குழந்தை பிறக்கும். கவலையே வேண்டாம் என்று உறுதி சொன்னான். அப்படி குழந்தை பிறந்தா நான் சொல்ற தானங்களையெல்லாம் செய்" குமுதவல்லியின் புருஷன் சங்கரராமன் சொல்லிக் கொண்டிருந்தான்.

குமுதவல்லிக்கு தன் வாழ்க்கை பிரச்னை மிகுந்ததா அல்லது பிரச்னையே இல்லாததா என்பது புரியவில்லை.

குமுதவல்லியின் தங்கை பிரேமா ஒரு சிலோன் வாலிபனைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டாள். அவனுடைய வீட்டோடு ஓட்டிக் கொண்டு ஆஸ்திரேலியாவில் போய் குடியேறி விட்டாள்.

மிக நலமாக இருக்கிறேன் என்று தாய் தந்தையருக்குக் கடிதம் போட்டாள். ஒரு பையனும், ஒரு பெண்ணும் பிறந்திருப்பதாக யாரோ சொன்னார்கள்.

ஆஸ்திரேலியாவிலிருந்து புருனேக்குக் குடிபெயரப் போவதாக ஒரு தகவல் வந்தது. பெயர்ந்து விட்டதாக ஒரு தபால் வந்தது.

குமுதவல்லியின் தாய் தந்தையருக்கே பிரேமாவைப் பற்றிய நினைப்பு விட்டுப் போய்விட்டது.

வாழ்க்கையில் எல்லோருக்கும் ஒரு லட்சியம் இருக்க எல்லோரும் அதை நோக்கி போராடி நடக்க தான் மட்டும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட வாழை மட்டை போல போய்க் கொண்டிருப்பதாய் குமுதவல்லிக்குப் பட்டது.

அவள் கதிரவனைக் குறித்த ஸ்லோகத்தை நாள் தவறாது காலை பத்து மணிக்கு சொல்லத் துவங்கினாள். சொல்வதற்கு முன்பு சூரியனோடு ஒரு நிமிடம் பேசினாள்.

எனக்கு சத்ருக்கள் என்று யாருமில்லை பகவானே. யாரும் சத்ருவாக மாறாது இருக்க வேண்டும் என்பதே என் பிரார்த்தனை. எல்லோரும் நண்பர்களாக இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். எனக்கு நல்ல நண்பர்களைக் கொடு. என் புருஷன் உள்பட எல்லோர் நட்பையும் பலப்படுத்து' என்று சொல்லி விட்டு படிக்கத் துவங்குவாள்.

"ஆதித்யம் ஹிருதயம் புண்ணியம் சர்வ சத்ரு விநாஸனம்"

அந்த வரிகளைப் படிக்கும்போதெல்லாம் லேசாய் சிரிப்பு வரும்.

ஆனால் வாழ்க்கை நேர்கோடு அல்ல, அது இடதும் வலதுமாய் திரும்புவது கிழக்கும் மேற்குமாய் அலைவது.

அவள் வாழ்க்கை சற்று வளைந்து வேறுபக்கம் திரும்பியது. அவள் மைத்துனன் வருவதாக போன் செய்தான்.

அவள் புருஷனிடம் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னான். நாற்பது நாள் லீவில் வரப்போவதாகத் தெரிவித்திருந்தான்.

எதாவது வாங்கி வர வேண்டுமானால் முன்கூட்டியே தெரிவிக்கச் சொன்னான். கிளம்புகிற தேதியை மறுபடி போனில் தெரிவிப்பதாகச் சொன்னான்.

'குமுதவல்லி வீட்டை சீர்செய்யத் துவங்கினாள். மாடி அறைகளை மீண்டும் ஒருமுறை மெல்லியதாய் பெயிண்ட் செய்து வாசம் போக இரண்டு நாள் கதவு திறந்து வைத்து நாற்காலி மேஜைகளுக்கு மெருகூட்டி எட்டாயிரம் ரூபாய்க்கு நுரைமெத்தை வாங்கி ஒரே வார உழைப்பில் வீடு ரம்மியமாயிற்று.

"இதெல்லாம் இருக்கட்டும் குமுதவல்லி அவன் பொண்ணு பாருன்னு சொல்லியிருக்கானே.... அதுக்கு எதாவது ஏற்பாடு பண்ணியிருக்கயா..."

"அது நீங்க பண்ணனும். உங்க அப்பா அம்மா பண்ணனும். என் கிட்ட தள்ளினேள்ளா."

"எங்கப்பா அம்மா செய்யமாட்டா. எங்கயோ டெல்லில பொண்ணோட உட்கார்ந்திண்டிருக்கா. அம்மா இன்னொரு பொண்ணோட திருவனந்தபுரத்தில் இருக்கா. நீதான் பார்க்கணும்."

"யாரும் சொல்லாம எப்படி நான் பார்க்கறது."

"யார் சொல்லணும் சொல்லு. அவனுக்கு டெல்லி நம்பர் தெரியாதா. திருவனந்தபுரம் நம்பர் தெரியாதா. அங்க போன் பண்ணாம இங்க ஏன் போன் பண்றான்."

"கடவுளே, எவ்வளவு கஷ்டமான விஷயம் மாதிரி பேசறேள். அவருக்கு எந்த மாதிரி பொண்ணு வேணும். என்ன செய்யணும். எந்த வித்தியாசம் கூடவே கூடாது, என்ன படிச்சிருக்கணும். என்ன ஹைட்... செக்கச் செவேர்னு வேணுமா. சுமார் நிறமா இருந்தா போறுமா...எவ்வளவு இருக்கு இதுல" குமுதவல்லி மடமடவென்று பேசினாள்.

"நான் போன் பண்ணிப் பேசட்டுமா."

"வேண்டாம். போன் பண்ணி உங்கம்மாக்கிட்ட பேசுங்கோ. அவா என்ன சொல்றான்னு பார்த்துட்டு அதுக்குமேல யோசிப்போம்."

"உன் பொண்டாட்டியைப் பார்க்கச் சொல்லேன்டா" அம்மா ஒரே வரியில் பந்தைத் திருப்பி அனுப்பினாள்.

"இங்க சென்ட்ரல் கவர்மென்ட் க்வார்ட்டர்ஸ்ல இருக்கோம். மொத்த தமிழாள் நாலு பேர். பஞ்சாபி உத்திரபிரதேசம், அஸாமின்னு நிறைய ஆட்கள் இருக்காங்க. இங்க போய் நான் என்னத்தைப் பேசுவேன். என்னை விட்டுட்டு குழந்தைகள் ரெண்டு நாள் கூட இருக்க மாட்டேங்கறது."

"அலைஞ்சு செஞ்சவரைக்கும் போறாதா இன்னும். அலையணுமான்னு மாப்பிள்ளை கேட்கறார். வீட்டுக்கு மூத்தவனா நீயே பார்த்து முடி."

அம்மா சொன்னதை டெல்லியிலுள்ள அப்பாவிடம் சொன்னாள். அப்பாவுக்கு அந்த விஷயமே மறந்து போய்விட்டது.

என்ன பொண்ணு...யார் பொண்ணு. அவனுக்கு நீ ஏன் பொண்ணு பார்க்கணும். அவனை அமெரிக்காவுலயே பொண்ணு பார்க்கச் சொல்லுடா. இங்க இருக்கறவாளுக்கு வேற வேலையில்லை. மினிஸ்ட்ரி இன்னும் ரெண்டு நாளில கவுரப் போறது. மொத்த டெல்லியும் தகிச்சுண்டிருக்கு. இப்ப போய் பொண் பார்க்கணும்னா யாரால முடியும்.

தமிழ்நாட்டுல அந்தம்மாவுக்கு பயங்கர சப்போர்ட்டாமே. ராணி மாதிரி கொண்டாடறாளாமே. உன் குழந்தைகள் சௌக்கியமா இருக்காளா ...என்று கேட்டுவிட்டு பதில் எதிர்பார்க்காமல் போனை வைத்து விட்டார்.

கார்ட்லெஸ் போனில் அவர் பேச்சைக் கேட்ட குமுதவல்லி தலையில் அடித்துக் கொண்டாள்.

டெல்லிக்குப் போன எல்லாருக்கும் கொஞ்சம் அரசியல் பைத்தியம் புடிக்கும்னு சொல்வா. இது அரசியல் பிசாசான்னா மாறிருக்கு" அலுத்துக் கொண்டாள்.

"மாமனாரும், மாமியாரும்' மச்சினருக்காக என்னைப் பொண்ணு பார்க்க சொல்லிருக்காப்பா" நங்கநல்லூர் போய் நீட்டி முழக்கி பேசினாள்.

"இதுக்குத்தான்...இதுக்குத்தான் நான் ஆதித்ய ஹிருதயம் ஸ்தோத்திரம் படிக்கச் சொன்னேன்."

"புரியலையே."


"வம்பு தானா வர்றது பார்."

"என்ன வம்பு."

"அவா வீட்டு பிள்ளைக்கு பொண் பார்க்கறதை உன் தலைல வச்சுட்டா."

"ஏன்...என் மச்சினனுக்கு நான் பார்த்தா என்ன."

"பாரு. நன்னா பாரு. நாளைக்கு குத்தம் குறை இருந்துதுன்னு
வச்சுக்கோ...உன்னை உண்டு இல்லைன்னு பண்ணிடுவா. வந்தவ கொஞ்சம்
அதிரலா பேசினான்னு வச்சுக்கோ என் குலப் பெருமையையே கெடுத்துட்
டாளேன்னு உன்னைக் குறை சொல்வா. தெரியாத கல்யாணம் பண்ணி
வச்சுட்டோம்னு உன் பெயர் சொல்வா."
"ஐயோ..." குமுதவல்லி பயந்தாள்.
"இப்ப என்ன பண்றது. பெற்றோரிடம் கேட்டாள்.
"மாட்டேன்னாலும் தப்பு. மாட்டிண்டாலும் தப்பு."
வீடு அவளைக் கலவரப்படுத்தியது.
"உன் புருஷன் ரொம்ப நல்லவன். பரமஞானி. அதனால உன் வண்டி
ரொம்ப நன்னா ஓடறது. இந்த மரியாதையெல்லாம் உங்க மாமனார் மாமி
யார்கிட்ட எதிர்பார்க்காதே" அப்பா எச்சரித்தார்.
கன்னுன்னு துடிக்க வைக்கற மாதிரி வார்த்தை சொல்றதுல உங்க
மாமியார் படு கெட்டிக்காரி. வீணா மாட்டாதே" அம்மா எச்சரித்தாள்.
தன்னைச் சுற்றி மெல்ல மெல்ல சத்ருக்கள் உருவாகிக் கொண்டிருப்ப
தாக குமுதவல்லிக்கு தோன்றியது.




ஒரு திருமண ஏற்பாடு நிலையத்தில் மைத்துனனின் பெயரைப்
பதிந்து வைத்தாள். மாம்பலத்தில் பிரபலமாக இருக்கிற ஒரு ஜோஸ்யரின்
வீட்டிற்குப் போய் நல்ல வரன் இருந்தால் சொல்லுங்கள் என்றாள்.
புருஷனின் துணையோடு ஞாயிற்றுக்கிழமை ஹிண்டுவில் விளம்பரம்
கொடுத்தாள். மங்கையர் மலருக்கு அவளே அனுப்பினாள்.
நல்ல குடும்பப் பெண்மணியாக யார் எதிர்ப்பட்டாலும் ஒரு வரன்
இருந்தா சொல்லுங்கோ மாமி என்று வேண்டினாள்.
அவள் மைத்துனன் வேதமூர்த்தி வருவதற்குள் நாலைந்து பெண்
களைப் பார்த்து வந்தாள். எதுவும் அவள் மனசுக்குப் பிடிக்கவில்லை.
மைத்துனன் வருகை பத்து நாள் தள்ளிப் போயிற்று.
இந்த முறையும் அவன் சூசகமாக ஞாபகப்படுத்தினான்.
"அதில்லப்பா...எந்த மாதிரி பொண்ணு வேணும்னு நீ சொன்னா
அதுக்கேத்தபடி...."குமுதவல்லி குறுக்கே புகுந்து பேசினாள்.
"எல்லாரும் எந்த மாதிரிப் பொண்ணா கேட்பா."
"அழகா, கெட்டிக்காரியா, கொஞ்சம் வசதியா."
"அதே...அவ்வளவே. இதுக்குமேல என்ன சொல்ல வேண்டியிருக்கு.
நீங்க நாலஞ்சு பேர் பார்த்து வைங்கோ. நான் பேசிப் பார்த்து செலக்ட்
பண்ணிக்கறேன்."
அந்த டெலிபோன் பேச்சுக்குப் பிறகு சங்கரராமன் மாடிக்கு உலவப்
போய்விட அவள் மாலையும் கதிரவனைப் பற்றிய துதிப்பாடல் படித்தாள்.
மறுவாரம் ஆங்கில பேப்பரிலிருந்து மூன்று கவர்கள் நிறைய கடிதங்



கள் கொடுத்து விட்டு போனான்.
கொஞ்சம் நம்பிக்கை பிறந்தது.
பிரித்துப் படித்ததில் ஆறேழு தேறியது. மதுரையில் ஒன்றும், திருச்சி
யில் இரண்டும் பாண்டிச்சேரி, திருநெல்வேலி, கன்யாக்குமரி என்று தலா
ஒன்றுமாய் சிதறிக் கிடந்தது.
ஒரு பெரிய தமிழ்நாடு டூர் போட்டால்தான் இவர்களையெல்லாம்
பார்க்க முடியும் என்று தோன்றியது.
கோவிலில் பார்க்கும் மாமி ஒரு பெண்ணைச் சுட்டிக் காட்டினாள்.
அந்தப் பெண் மிக அழகாக இருந்தாள். கூப்பிட்டுப் பேசியபோது நாணத்
தோடு மிருதுவாய் பேசினாள்.
"எங்க வீட்லயும் பார்த்துண்டிருக்கா ஆன்ட்டி. உங்க அட்ரஸ்
கொடுங்கோ. அப்பாவை ஜாதகம் அனுப்பச் சொல்றேன்."
அந்தப் பெண் பேசிய கம்பீரம் மிகவும் பிடித்திருந்தது.
"உங்க மச்சினர் என்ன பண்றார்" வெட்கம் காட்டாமல் விபரங்கள்
கேட்டுக் கொண்டது.
"கல்யாணம் ஆறது ஆகலை...அது வேற விஷயம். தெய்வ சங்கல்பம்.
உங்களைப் பார்த்தா எனக்குப் பிடிச்சிருக்கு. உங்களுக்கும் என்னைப் பிடிச்
சிருக்கும்னு நினைக்கறேன். நாம பரஸ்பரம் கத்துக்குவோமே. எங்க வீட்டுக்கு
வாங்களேன்" விலாசம் கொடுத்தாள்.
"குமுதவல்லியா...வா. உனக்கு நான் உறவு தெரியுமோ. உன் தம்பியைக்
கொடுத்த இடத்துல எனக்கு நெருங்கிய பந்துக்கள் இருக்கா. உங்காத்துக்
காரர் பத்தி ரொம்ப நல்லா சொல்வா."
அந்தப் பெண்ணின் வீட்டிற்கு போனபோது பலமாய் உபசரித்தார்
கள்.
"வெளிநாட்டுல கொடுக்கறதுக்கு பயமா இருக்கு. நான் யாரையும்
குறையா சொல்லலை. சில உண்மைக் கதைகளைப் பத்திரிகைல படிச்சுட்டு
ஏன்டாப்பா பொண்ணைப் பெத்தோம்னு கவலைப்பட வேண்டியிருக்கு
போயேன். மாம்பலம், மயிலாப்பூர்னு இருந்தாலே போறும். வேற எந்த
திசைக்கும் போக வேண்டாம்னு போயிடுத்து. வெளிநாட்டுல வாழ்க்கைப்
படறவா நிறைய பேர் வாழ்க்கை சரியா இல்லை அப்படீன்னு தான்
கேள்விப்படறேன். ரொம்ப அதிகமா போச்சுன்னா பெங்களூர், ஹைதரா
பாத்னு கொடுக்கலாமே தவிர அதைத்தாண்டி போறதுக்கு பயமா இருக்கு"
"எங்க மச்சினர் அப்படி இல்லை மாமி."
"ஐயோ உங்க மச்சினரை நான் அப்படி சொல்லவேயில்லை."
"மத்தபடிக்கு உங்க பயம் நியாயம்தான் மாமி. எனக்கு பொண்
இருந்தா இப்படி வெளிநாட்டுக்குக் கொடுக்க நானும் யோசிப்பேன். உங்
களை மாதிரியே மயிலாப்பூர் மாம்பலம் போறும்னு நினைப்பேன்.
அவள் ஆமோதிப்பைத் தொடர்ந்து அந்த வீடு அவளிடம் ஒட்டிக்
கொண்டது. அந்தப் பெண்ணைப் பாடச் சொன்னது. டிபன் செய்ய
விரட்டியது. நகைகள் காட்டியது. அவர்கள் வீட்டில் இன்னொரு பெண்
ணின் திருமணம் ஆல்பம் காட்டியது.
ஒரு புதுவகை டிபனை அந்தப் பெண் பிரமாதமாக செய்திருந்தா
நறுவிசாக பரிமாறினாள்.
ஏ கிளாஸா பண்ணிருக்கே என்று பாராட்டியபோது விழுந்து ந
கரித்து அந்த பாராட்டை ஏற்றுக் கொண்டாள்.

எனக்கு ஒரு தம்பி இருந்தா நான் கண்டேன் கண்டேன்னு பண்ணிப்
பேன். இது எனக்கு புகுந்த வீடு. அந்த மனுஷாளுக்காக நான் வந்திருக்கேன்.
"என் சொல் எவ்வளவு எடுபடும்னு தெரியலை. என் மச்சினர் மறுக்க
மாட்டார். மத்தவா என்ன சொல்வாளோ...என்ன நன்னா இருந்தாலும்
நான் பார்த்துட்டு வந்தேங்கறத்துக்காகவே குறை சொல்லலாம்."
"எல்லாரும் நல்ல மனுஷாதான் மாமி. போறாத வேளை எதாவது
பேச வைக்கும்."
"ஆஹா...ஆஹா. பத்து பெத்து இறக்கினவ மாதிரி பேசறே. நாங்க
ஒன்னும் உன்னைத் தப்பா நினைச்சுக்கவே மாட்டோம். கல்யாணத்துக்கு
பொண் இருந்தா நாலு பேர் வருவா பேசுவா எல்லாம் நடக்கும். உன்னை
மாதிரி ஒட்டிக்கிறவா கிடைச்சா எங்களுக்கு நிம்மதி. இவ தலைல என்ன
எழுதியிருக்கோ. அடுத்த தடவை உங்க மச்சினன் போட்டோ கொண்டு
வந்து கொடேன்."
அவன் போட்டோ கொடுக்க மறுபடி போனபோது அந்த வீடு இன்
னும் நெருக்கமாயிற்று.
"உங்க வீட்டைப் பத்தி விசாரிச்சேன், குமுதவல்லி. எல்லாரும் ஆஹா
ஓஹோங்கறா...அந்த சம்பந்தம் கிடைச்சா விடாதீங்கோங்கறா. உங்க வீட்டுக்
காரரைப் பத்தி ரொம்ப மரியாதையா பேசறா."
"உங்கப்பாவும் உன் புருஷனும் அண்ணா தம்பியா கை கோர்த்துண்டு
நடப்பாளாமே. ஒரே மந்தாரை இலைல, குல்ஃபி ஐஸை ராத்திரி வெட்டி
வெட்டி தின்னுண்டு பேசுவாளாமே?"
"தம்பியும் அண்ணா மாதிரிதானே இருப்பார். உங்க மாமனார் என்ன
கேட்பார், ஏது கேட்பார்னு விசாரிச்சு சொல்லு."
"அவா ஒன்னும் கேட்கமாட்டா மாமி. நான்தான் கேட்கணும்."
அவளைச் சுற்றி பெண்கள் உட்கார்ந்து கொண்டார்கள்.
"நல்ல இடம்னு மனசுக்கு பட்டுடுச்சு குமுதவல்லி. காசு பணம்
பார்க்க மாட்டோம். நூறு நூத்தி இருபது பவுன் கேட்டா கூட போடுவோம்.
"பகவானே...என்னை இதெல்லாம் பேச வைக்காதீங்கோ. என் ஒரே
கவலை...இவளை என் மச்சினருக்குப் பிடிக்கணுமேன்னுதான்."
"பிடிக்காத போயிடுங்கறயா."
"எனக்குத் தெரியலையே மாமி. மத்தவாளுக்காக நான் வாக்கு
"எனக்குத் தெரியலையே மாமி. மத்தவாளுக்காக நான் வாக்கு
கொடுக்க முடியுமா. எல்லாரும் சேர்ந்து தேர் இழுத்து பார்ப்போம்."
"சரி. நீ சொல்றது புரியறது. இருந்தாலும் எங்க பக்கத்து கணக்கை
சொல்லிடறேன். நூத்தி இருபது சவரன் போட்டு கைல ஒரு லட்சம் கொடுக்க
தயார். முதநாள் ரிஸப்ஷன் செலவு நீங்க பார்த்துக்கோங்க. மறு நாள்
கல்யாணச் செலவு எங்களோடது. சொத்து பங்கு பிரிக்கறபோது இவளுக்கு
உண்டானது வரும்."
மிகமிக நிறைவாக அவர்கள் பேச்சு இருந்தது.
மைத்துனன் போட்டோவை அந்த வீடு முழுவதும் ஆவலோடு பார்த்
தது. அந்தப் பெண் போட்டோ பார்த்து விட்டு தாமரையாய் முகம் சிவந்
தாள். அந்த நாணத்தைப் பார்த்ததும் குமுதவல்லி மிகவும் மகிழ்ந்து
போனாள்.
நல்லபடியான குலப் பெண்களுக்குத்தான் முகம் சிவந்து' போகும்
நாணம் வரும். பெண்கள் இப்படி வெட்கப்படுவதைப் பார்க்கவே அபூர்வ
மாக இருக்கிறது.



இந்தப் பெண் கெட்டிக்காரி. குட்சும புத்தி உடையவள். இதையெல்
லாம் மீறியும் அவளிடம் நாணம் இருப்பது மிகமிக நல்ல விஷயம். இந்த
நாணம் ஆணைப் பரவசப்படுத்தும். இதைவிட அருமையான பெண் மைத்
துனனுக்குக் கிடைக்க முடியாது. அழகு, அறிவு, அன்பு, அடக்கம் என்று
ஏகப்பட்ட குணங்கள் இந்தப் பெண்ணிடம் பொங்கி ததும்புகின்றன.
அப்பா என் கல்யாணத்துக்கு இருபத்து மூன்று சவரன்கள்தான்
போட்டார். இங்கு நூத்தி இருபது சவரன்கள் கிடைக்கின்றன.
இந்த சம்பந்தம் முடிந்தால் புகுந்த வீட்டுக்கு மிக நல்லது. தனக்கும்
ஒரு கௌரவம். மாமனாரும், மாமியாரும் தன்னைக் கொண்டாடக்கூடும்.
தன்னை அதிகம் மதிக்காத நாத்திகள் வலிய வந்து பேசக்கூடும்.
ஒருத்தியா நின்னு மச்சினன் கல்யாணத்தை எங்க குமுதவல்லி
முடிச்சா. குமுதவல்லி புக்காத்துப்பக்கம் மனுஷாளே கிடையாது. இருக்கற
மனுஷாளுக்கு சாமர்த்தியம் போறாது. இந்தக் கல்யாணம் முடியறவரைக்கும்
அந்தக் குழந்தை பட்ட பாடு இருக்கே...
தன்னையே எதிரே வைத்து தன்னை நோக்கியே வசனம் சொல்லிக்
கொண்டாள். தன் வசனத்தில் தானே மகிழ்ந்து போனாள். இப்படிப்பட்ட
வசனங்கள் தன்னை நோக்கி வரவேண்டுமென்று ஆசைப்பட்டாள்.
ஆயினும் அமைதியாக இரு. அமைதியாக இரு என்று உள்ளே ஒரு
குரல் கேட்டுக் கொண்டே இருந்தது.
"என்ன குமுதவல்லி. இத்தனை கேக்கறே...இன்னும் புடி கொடுத்து
ஒன்னுமே பேசமாட்டேங்கறயே" பெண்ணைப் பெற்ற தாயார் ஆதங்கம்
தாங்காமல் அவசரப்படுத்தினார்
"என் மச்சினர் வரட்டும் மாமி. எனக்கு உங்க பெண்ணைப் பிடிச்
சிருக்கு. என்னால ஆன முழு முயற்சியும் பண்ணுவேன். மத்தபடி கடவுள்
விருப்பம்."
பெண்ணே முன்வந்து தாயாரை சமாதானப்படுத்தினாள்.
வீடு திரும்பும்போது பெண்ணைப் பெற்றவரை விட அதே கவலை
குமுதவல்லியைப் பற்றிக் கொண்டது.
கவலையில் பல விஷயங்கள் மறந்து போயின. குழம்பில் இரண்டு
முறை உப்பு போட்டு விட்டாள். கீரை பொரியலில் உப்பே இல்லை. கல்
மோதிரம் வாஷ்பேஸினில் சுழற்றி வைத்து மறந்து விட்டாள். ஹால் பெருக்கி
னாள், படுக்கையறையை மறந்து விட்டாள். மேல்நிலைத் தொட்டிக்கு
தண்ணீர் ஏற்ற மோட்டார் போட்டு அணைக்க மறந்து போய் வீடு பூட்டிக்
கொண்டு கிளம்பினாள். பாதிவழியில் ஞாபகம் வந்து ஓடிவந்தாள்.
எதாவது ஞாபகப்படுத்தினால் எரிந்து விழுந்தாள்.
அவள் மைத்துனன் வருவதற்கு முதல் நாள் அவளுக்கு ஒரு கனவு
வந்தது.
அவள் ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் உட்கார்ந்து வேகமாக போய்க்
கொண்டிருக்கிறாள். சைக்கிள் ரிக்ஷா பூமியிலிருந்து இரண்டடி உயரத்துக்கு
தரையில் படாமல் ஓடிக் கொண்டிருக்கிறது. எதிர்க்காற்றைக் கிழித்துக்
கொண்டு சைக்கிள் ரிக்ஷா பறக்கிறது. புடவைத் தலைப்பு பறந்து படபட
வென்று அடித்து சைக்கிள் ரிக்ஷா சக்கரத்தில் மாட்ட சட்டென்று மேலாக்கு
இழுத்து இடுப்புப்புடவை அவிழ்ந்து ஜாக்கெட்டும் பாவாடையு மாய்
தெருவில் நின்றாள்.
சைக்கிள் ரிக்ஷாக்காரன் உட்பட நிறைய பேர் வாய்விட்டு சிரித்தார்
கள். அவள் உடம்பு பொத்தி அவமானத்தில் கூசி, குறுகி நிற்க ஒரு வீட்

வாசற்படியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிற மைத்துனன் தலையில் அடித்துக் கொண்டு போய் விடுகிறான்.

நீயெல்லாம் ஒரு பிறவி என்பது போல கேவலமாகப் பார்க்கிறான் விழிப்பு வந்துவிட்டது. வியர்த்துக் கொட்டியது.

ஏன் திடீரென்று இவ்வளவு அவஸ்தைப்படுகிறேன். எதனால் மனசு மறுகுகிறேன். ஏன் இவ்வளவு கெட்ட கனவுகள்.

மைத்துனன் கல்யாணத்தைத் தலைமேல் சுமப்பது தவறா. எனக்கென்ன...என்று விட்டுவிடலாமா. இனிமேல் விட முடியுமா.

அப்பா வீட்டுக்கு வந்து எச்சரித்தது இதைத்தானோ.

எனக்கு நானே சத்ரு என்றாரே என் புருஷன். அதுவும் இதுதானோ. நாளைக்கு மைத்துனன் வேண்டாம் என்று சொன்னால் இந்த வீட்டில் என் முகம் இறக்கமாகப் போகுமோ.

இந்த விடியல் நேரத்து கனாவுக்கு என்ன அர்த்தம். புருஷனிடம் கனாவைச் சொன்னபோது சிரித்தான்.

“ஒன்னே ஒன்னு புரியுது குமுதவல்லி. ஒரு கல்யாணத்தை நின்னு நடத்தற அளவுக்கு உனக்கு சாமர்த்தியம் இல்லை.”

“நல்லவேளை, உனக்கு பொண் பிறக்கலை. பிறந்திருந்தா இதைவிட டென்ஷனாயிருப்பே.”

கல்யாணம்னு ஒரு விஷயத்தில இறங்கினோம்னா பத்துபேர் எதிர்ப்பு, பத்துபேர் ஆதரவுன்னு பிரியத்தான் பிரியும். இதைப் போட்டு மனசுல உழப்பிக்காதே.

இத்தனை தவிக்கறயே...நாளைக் கார்த்தால அவன் ஒரு வெள்ளைக்காரியோட கல்யாணமாயிடுத்துன்னு வந்தா என்ன பண்ணுவே” சங்கரராமன் கேட்டான்.

“என்ன பண்ணுவேன். விதியேன்னு வளைய வருவேன். மாம்பலத்துல என் மானம் சந்தி சிரிக்கும்.

இதோ கொண்டை முடிஞ்சுண்டு போறாளே குமுதவல்லி, இவ கதையை சொல்றேன் கேளு அப்படீன்னு எம்பின்னால சிரிப்பா. அவா சிரிக்கறதும் என் காதுக்கு வரும். விதியேன்னு கேட்டுக்க வேண்டியதுதான்.

“கடவுளே...எவ்வளவு எதிர்மறையான யோசனை. தோளைக்குலுக்கி பிரச்னையைக் கீழே தள்ளத் தெரியலையே. எல்லாம் நான்தான்னு அலட்டிக்கறபோது சின்னப் பேச்சும் பூதாகரமாகும். நல்லதுக்கு ட்ரை பண்ணு. நடக்கலையா மறந்துடு.”

“உங்க தம்பி வெள்ளைக்காரியோடயா வருவார்னு சொல்றேள்.”

“வந்தாலும் வருவான்னு சொல்றேன்.”

“அப்படி எதாவது சூசகமா சொல்லிருக்கானா? நான் அவரை நம்பி நிறைய பேர்கிட்ட பேசிருக்கேன்.

பொண்ணு பார்த்துட்டு பிடிக்கலைன்னா கூட ஒத்துக்குவா. உங்க வெள்ளைக்காரியக் கல்யாணம் பண்ணிண்டு இங்க வந்து நின்னார்னா செருப்படி விழும். உங்கக்கிட்ட போன்ல சொன்னாரா, வெள்ளைக்காரியக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு.”

“குமுதவல்லி, உனக்கு ரொம்ப சீக்கிரம் பைத்தியம் பிடிக்கப்போறது. ஒரு பொம்மனாட்டி உளறிக் கொட்டறத்துக்கு ஒரு அளவு இருக்கணும். நீ தேவைக்கு அதிகமா பயப்படறே. அநியாயத்துக்கு உளறிக் கொட்டறே. உன்னைப் பத்தி கவலையா இருக்கு.”





"என்ன பண்ணட்டும் சொல்லுங்கோ. எக்கேடும் கெட்டுப் போங்
கோன்னு இழே போட்டுரட்டுமா. உங்கக் கல்யாணம் உங்கப்பாம்மா பாடு
அப்பமன்னு உங்க தம்பிக்கிட்டே சொல்லிரட்டுமா."
"கூடாது குமுதவல்லி. இது உன் வேலை. இன் அதர் வேர்ட்ஸ் என்
வேலை. என் வேலையை எனக்காக நீ செய்யறே. வீட்டுக்கு மூத்த மரு
மகள்...அவளுக்குன்னு சில கடமைகள் இருக்கில்லையா. அதைப் பண்ணித்
தானே ஆகணும்."
"கடவுளே. இப்படியும் பேசறேன். அப்படியும் பேசறேன். உங்கக்
கிட்ட யோசனை கேட்கறதுக்கு சும்மா இருக்கலாம்."
சங்கரராமன் மௌனமானான்.
குமுதவல்லியின் மனம் இரையத் துவங்கியது.
மறுநாள் ஏர் இந்தியாவில் மைத்துனன் சென்னைக்கு வந்து இறங்கி
னான்.
கூடவே ஒரு அமெரிக்க பெண்ணைக் கூட்டி வந்தான்.
குமுதவல்லிக்கு தலைசுற்றி மயக்கம் வந்தது. அப்படியே அடுக்களை
யில் சரிந்து உட்கார்ந்து விட்டாள்.
"அண்ணா, இந்தப் பெண் எனக்கு ஃப்ரெண்ட் என் பாஸினுடைய
மைத்துனி. தஞ்சாவூர் பெரிய கோயிலை விதம்விதமா போட்டோ எடுத்து
புக்கா போடறதுக்கு வந்திருக்கா. இன்னிக்கே கிளம்பணுங்கறா."
ஒரு ரெண்டாயிரம் போட்டோ எடுக்கணுமாம். நாலஞ்சு நாள்
தங்கணுமாம். நீ கொஞ்சம் ஆபீஸுக்கு லீவ் போட்டு இவளைக் கூட்டிண்டு
போயிட்டு வர்றயா. உன்னைப்பத்தி ஆஹா ஓஹோன்னு சொல்லி வச்சிருக்
கேன். எப்படி ஹான்னு உன்னைப் பார்க்கறா பார். தஞ்சாவூர்ல ஃபைவ்
ஸ்டார் ஓட்டல்லாம் வந்துடுத்தாமே. அங்கே தங்கிப்போ. செலவுபத்தி
பயப்படாதே. எல்லாம் சப்ஜாடா அவளே பண்ணுவோ. நம்ம மருவூர்
கிராமம் பத்தியும் சொல்லிருக்கேன். அங்கயும் கூட்டிண்டு போயிட்டு வா.
கொஞ்சங் கூட வெய்யில் ஆகாது. ஏஸி கார் போட்டுக்கோ. பெரும் பணக்
காரி. ஆனா ரொம்ப அடக்கமான பொம்மனாட்டி. ரொம்ப மரியாதையா
கத்துக்குவோ."
குமுதவல்லிக்கு உயிர்வந்தது.
அன்று இரவே அண்ணாவும் அந்த அமெரிக்கப் பெண்மணியும்
தஞ்சாவூர் கிளம்பிப் போனார்கள்.
திருமணப் பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் குமுத
வல்லி திகைத்தாள்.
"என்ன மன்னி, எதாவது பொண் பார்த்திருக்கேளா. நம்ம வீட்டுக்கு
வரச் சொல்வேளா. நான் போய் பொண் பார்த்துட்டு சொஜ்ஜி பஜ்ஜி
திங்கறதை விட அந்தப் பொண் நம்மாத்துக்கு வந்தா நன்னா இருக்காது...ஐ
மீன், பொண்ணு வந்து மாப்பிள்ளை பார்க்கறது நன்னா இருக்காது....ஃபார்
எ சேன்ஜ் செய்தால் என்ன.."
"இல்லப்பா. அப்படி செய்யப்படாது. நானும் நீயும் ஒத்துண்டா
போறாது. பெண் ஒத்துக்கணும். பெண்ணைப் பெத்தவா ஒத்துக்கணும்.
வீணா ஏன் ஒரு சிஸ்டத்தை மாத்தணும்."
"பெண் பிடிக்கலைன்னா சொல்லிடலாமா."
"தாராளமா சொல்லலாம்."



"பெண் அழகா இருக்கணும் மன்னி."
"நான் ஒரு பெண் பார்த்திருக்கேன் ரொம்ப அழகு"
"கொஞ்சம் படிச்சிருக்கணும். இங்கிலீஷ் பேசணும்."
"எம்.எஸ்ஸி. படிச்சிருக்கா."
"கருப்பா இருந்தா அமெரிக்கன்ஸ் பிளாக்கின்னு கூப்பிட்டுர்றாங்க."
"இந்தப் பெண் நல்ல சிவப்பு."
"சவுண்டா இருக்காங்களா."
"நூத்தி இருபது பவுன் போடறேங்கறா."
"நகைல்லாம் எடுத்துண்டு போக மாட்டேன் மன்னி. உங்கக்கிட்ட
கொடுத்துட்டு போயிடுவேன். நீங்க இங்க ஜாக்கிரதையா வச்சுக்கோங்க.
பின்னால தேவைப்படறபோது கேட்கறேன்.
"ஒரு ப்ளேன் டிக்கெட் வாங்கற மாதிரி கம்பீரம் இருந்தா போறும்.
எல்லாத்திலயும் எங்கிட்ட எதிர்பார்க்காம இருந்தா போறும்.
"நான் செய்வேன் மன்னி. ரொம்பப் பிடுங்கினா ஐயோன்னு போகும்.
"இந்த தடவை நான் அதிகம் எதுவும் வாங்கிண்டு வரலை. ஆனா
நல்ல காசு கொண்டு வந்திருக்கேன். இங்கேயிருக்கிற நாற்காலி மேஜையெல்
லாம் தூக்கிப் போட்டுட்டு எல்லாமே புதுசா வாங்கிடலாம்.
"உங்கக்கிட்ட எத்தனை ஜரிகைப் புடவை இருக்கு"
"ஏழு இருக்கு. ஏன். எல்லாமே சுமாராதான் இருக்கும்."
"வாங்க. கடைக்கு போகலாம். இன்னொரு ப்ரைவேட் டாக்ஸி ஏற்
பாடு பண்ணுங்க. குழந்தைகளுக்கும் எதாவது வாங்கித் தரேன். என்
கல்யாணத்தையொட்டி பூணூலும் போட்டுரலாம்."
முதலில் நகைக் கடைக்குப் போனார்கள். இரண்டு பையன்களுக்கும்
மும்மூன்று சவரனில் செயின், இரண்டு சவரனில் ப்ரேஸ்லெட், வெள்ளிச்
சொம்பு, பஞ்சபாத்திரம், உத்தரணி எல்லாம் வாங்கிக் கொடுத்தான்.
வெள்ளிப் பூணூல் தங்கப் பூணூல் வாங்கினான்.
பட்டு வேட்டி அப்பாவை வாங்கித் தரச்சொல்கிறேன் என்று
சொல்லிவிட்டு விதம்விதமாய் பேண்ட் சட்டைகள் வாங்கினான்.
"அப்பாக்கு ஒன்னும் வாங்கலையா" மூத்தப் பிள்ளை ஆர்வத்தோடு
கேட்டது.
"உங்கப்பாவுக்கு அமெரிக்கன் ஜீன்ஸ் வாங்கிண்டு வந்திருக்கேன்.
போன தடவையே இடுப்பளவு எடுத்துண்டு போனேன்."
மைத்துனன் கண்சிமிட்டினான்.
"ஐயோ...எங்கப்பா ஜீன்ஸ் போட மாட்டா."
"போட வைக்கணும். வெறுமன கொசாமுசான்னு வெள்ளைப்
பேண்ட் வெள்ளை சட்டை போட்டுண்டு போனா எப்படி...வார்ட் பாய்
மாதிரி இருக்கு."
"மூணு ஜீன்ஸ் எடுத்துண்டு வந்திருக்கேன். மூணும் வெவ்வேற கலர்.
அது போட்டு ஒயிட் ஷர்ட் போட்டா ரொம்ப நன்னா இருக்கும். நாம
எல்லாரும் சேர்ந்து உங்கப்பாவைப் போட வைக்கலாம் என்ன..."
புடவைக் கடைக்குப் போனார்கள்.
ஐந்தாயிரம், ஆறாயிரம், எட்டாயிரம், பத்தாயிரம் என்று நான்கு
விலையில் நான்கு பட்டுப்புடவைகள் எடுத்துக் கொடுத்தான்.
குமுதவல்லி அவன் பிரியத்தில் நெகிழ்ந்து போனாள். நன்றி சொல்ல

முடியாமல் தடுமாறினாள்.
அண்ணா போன் பேசும்போது லேசா சொன்னார். நீ பொண்
பாருன்னு லேசா சொல்லிட்டே. உன் மன்னி இங்கயும் அங்கயும் அலைஞ்சு
டென்ஷனாகி உடம்பைக் கெடுத்துக்கறான்னு வருத்தப்பட்டார். நான்
ரொம்ப அப்செட்டாயிட்டேன். உங்களை சிரமப்படுத்திருந்தா தயவுசெய்து
மன்னிச்சுக்கணும். எனக்கு உங்களை விட்டா மனுஷா கிடையாது."
"சும்மா இரு வேதமூர்த்தி. உனக்கு செய்ய வேண்டியது என் கடமை."
புடவை வாங்கி காசு கொடுத்து கார் நோக்கி நகரும்போது கோவிலில்
பார்த்த பெண்ணின் தாயார் எதிர்ப்பட்டாள்.
"மச்சினனா" என்று விசாரித்தாள்.
"எப்போ சொல்லியனுப்புவேள்" தொடர்ந்து கேள்வி கேட்டாள்.
"இன்னும் அந்தப் பேச்சே ஆரம்பிக்கலை மாமி. முந்தா நேத்து தானே
வந்திருக்கார்."
"புடவையெல்லாம் வாங்கறது பார்த்தவுடனே எங்கே செட்டிலா
யிடுத்தோன்னு ஒரு கிலேசம். நீ சொல்லாம இருக்க மாட்டேன்னு ஒரு
நம்பிக்கை."
அந்த மாமியின் பரிதாபமான முகத்தைப் பார்க்கும்போது வயிறு
கலங்கியது.
எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டுமே. யார் மனதும் நோகாமல்
இருக்க வேண்டுமே என்று ஏக்கம் வந்தது.
இந்த நேரத்துல இவர் வெள்ளைக்காரிச்சியோட தஞ்சாவூர்ல போய்
உக்காந்திண்டிருக்காரே. இல்லைடா, எனக்கு வேலை இருக்குன்னு இங்கயே
இருக்கப்படாது....இந்தப் பேச்சை எப்படி ஆரம்பிக்கறதுன்னே எனக்குத்
தெரியலை.
அவாளைப் பிள்ளை பார்க்க வரச் சொல்லுங்கோன்னு மச்சினர்
மறுபடியும் முருங்கை மரம் ஏறினா என்ன பண்ண முடியும்.
ஏறாதுன்னு என்ன நிச்சயம். இந்த மாமிக்கிட்ட போய் எங்க
மச்சினர் பொண் பார்க்க வரமாட்டாராம், பிள்ளை பார்க்க வரச்சொல்றார்
அப்படீன்னு சொன்னா வழிச்சிண்டு சிரிப்பா. மொத்த மேற்கு மாம்பலத்
துக்கும் நியூஸ் போய் என் மானம் கப்பலேறும். இப்பவே இந்த மாமி
கண்ணு நன்னா இல்லை.
நேரா கடைக்குள்ள போய் நான் என்னெல்லாம் புடவை வாங்கி
னேன்னு கேட்கத்தான் கேட்போ. எத்தனை ரூபா பில்லுன்னு பார்க்கத்தான்
பார்ப்போ. இங்க கேள்வி கேட்டுட்டு நான் நிஜம் சொல்றேனா, பொய்
சொல்றேனான்னு கோயில்ல பாத்து க்ராஸ் செக் பண்ணுவா. தப்பித்தவறி
பொய் சொல்லிட்டோம் தெரு முழுக்க தண்டோரா போடுவா. எத்தனை
வருஷம் ஆனாலும் நம்ம ஊர் பொம்மனாட்டியைத் திருத்தவே முடியாது.
சரி. பொண்ணைப் பெத்தவளுக்கு இப்படி நூறுவிதமா கவலை வரத்
தான் செய்யும். நம்ம போய் அடி அல்பமேன்னு சொன்னா நீ ரொம்ப
கெட்டிக்காரி, புள்ளையா பெத்துண்டுட்டேன்னு இடிச்சு காமிப்பா.
இந்த நேரத்துல இவர் வெள்ளைக்காரியோட போனதுதான் தப்பு.
அங்க என்ன கூத்து நடக்கறதோ...எம் புருஷன் சத்தியசந்தன் தான். இருந்
தாலும் கட்டை தெட்டையா ஒரு பொண்ணு மடியில படுத்துண்டு வயித்த
உரசினா கையைத் தூக்கி பிடறிலயா வச்சுக்க முடியும். தொடணும்னு
தோணலாம். போதாக்குறைக்கு என் புருஷனுக்கு பேச்சு சாமர்த்தியம் வேற.
தஞ்சாவூர் கோயில்னா வெல்லப்பாகு மாதிரி. இளம்கூடா வேர்க்கடலை



பர்பி வாங்கித் திங்கற சுகமா...பல விஷயங்கள் தஞ்சாவூர் பத்திப் பேசி
கிறங்கடிச்சுடுவார். என்னை விட்டுட்டு போக முடியாதுங்கறது வேற. அவ
நிறம் மாதிரி உன் தொடை இல்லையேன்னு சொன்னாக்கா குத்திக் கொன்
னுடலாம்னுதான் ஆத்திரம் வரும். கொல்ல முடியாது. அழுகைதான் வரும்.
ச்சே..நான் ஏன் இப்படி யோசிக்கறேன். பகவானே, எனக்கு இன்னும்
நல்ல புத்தியைக் கொடு.
என் புருஷன் சொல்றமாதிரி அநியாயத்துக்கு பயப்படறேன். அதிகமா
யோசனை பண்றேன். நான் இன்னும் கெட்டியா இல்லையோ.
அசடுதானோ...
இப்பக்கூட உன் கல்யாணம்பத்தி எனக்குத் தெரியாதுப்பா. நீயே
பார்த்துக்கோ அப்படீன்னு சொல்லிடலாமா.
வாழ்க்கையில் இதுவரை வாங்கியிராத நாலு மிக விலை உயர்ந்த
பட்டுப்புடவைகள் மடியிலிருந்தும் குமுதவல்லியின் மனசு அதில் போக
முடியவில்லை.
மைத்துனன் கல்யாணத்தையே பற்றிக் கொண்டு நின்றது.
நமக்கு நாமே எதிரிகள் என்பது மெல்லப் புரிந்தது. நமக்குள் இருக்கிற
சத்ருவை ஜெயிப்பதே முக்கியம் என்று புரிந்தது.
குமுதவல்லி புருஷனின் வரவுக்காகக் காத்திருந்தாள். வந்ததும்
பேச்சைத் துவங்கினாள்.




"இந்த இடத்துல ஒரு பொண்ணு பார்த்திருக்கேன். ரொம்ப நல்ல
இடம். அவாளும் உங்களைப் பத்தி விசாரிச்சுட்டு ரொம்ப ஆசையா
இருக்கா. வர்ற புதன்கிழமை பெண் பார்க்கப் போலாமா. நீங்களும் வரணும்.
நீங்க வர்றது ரொம்ப முக்கியம்.
"நான் எதுக்கு குமுதவல்லி இந்த அமெரிக்க பெண் பாட்ரீஷியா
வோட நான் டெல்லி போலாம்னு இருக்கேன். மைசூர் போலாம்னு இருக்
கேன். மைசூர்ல கொஞ்சம் கல்வெட்டுப் பிரதிகள் வாங்கணும்."
"என்ன பேச்சு இது. உங்க தம்பி கல்யாணம் முக்கியமில்லையா.
நாற்பது நாளில பெண் பார்த்து கல்யாணம் முடிக்கணும்னார். வந்து அஞ்சு
நாளாச்சு. ஒரு பேச்சையும் காணோம்."
"அதான் நீ இருக்கியே."
"தயவுசெய்து இப்படி பேசாதீங்க. எதோ வெள்ளைக்காரி கூப்பிட்டா,
நம்மூர் விஷயம் பார்க்கணும்னு. போயிட்டு வந்தேள் சரி. இன்னமும் அவா
பின்னாடியே சுத்திண்டிருந்தா மத்த வேலைகளைக் கவனிக்கறது எப்படி."
இந்தப் பெண்ணை வந்து பார்க்கச் சொல்லுங்கோ. அப்புறம் எங்க
வேணா போகட்டும்."
"என்னப்பா வேதமூர்த்தி. உன் மன்னி எதோ பொண்ணு பார்த்து
வச்சிருக்காளாம். போய் பார்த்துட்டு வர்றயா."
"பார்க்கலாமே."

"நான் போய் சொல்லிட்டு வரேன். ஒரு நல்ல நாளா பார்த்து..."

"நோ...நோ. அதுக்கெல்லாம் நேரமில்லை."

குமுதவல்லியின் புருஷ சங்கரராமன் படபடத்தான்.

"நாளைக்கு சாயந்திரம் மைசூர் கிளம்பறோம். கார்த்தால காஞ்சிபுரம் போயிட்டு வரலாம்னு இருக்கோம். அந்த பாட்ரீஷியா ஒரு அற்புதமான பொண்ணு. சோழ சரித்திரம் பத்தி அவ்வளவு தெளிவா இருக்கா.

பன்னெண்டுக்கு பதினாலு சைஸ்ல தஞ்சை பெரிய கோயில் பத்தி ஸ்பெஷல் போட்டோ புக் போடப்போறா. இங்கிலீஷ்லயும், ஃப்ரெஞ்சிலயும் இருநூறு பக்கத்துக்கு தடிமனா தனித்தனி புக்கா வரப் போறது.

புஸ்தகத்தை இந்திராகாந்திக்கு டெடிகேட் பண்ணப் போறா. இருநூறு பக்க புக்குக்காக ரெண்டாயிரம் போட்டோ எடுத்திருக்கா.

பதினொரு மணிக்கு படுக்கறா. நாலு மணிக்கு எழுந்துக்கறா. கொழு குண்டு சாப்பிடறா.

வேலை...வேலை...வேலைதான்.

நம்ம ஊர்பத்தி இவ்வளவு அழகா ஒரு புக் வர்ற போறது. நாம அதுக்கு உதவி செய்ய வேண்டாமா. அவ சின்ஸியரிட்டில பாதியாவது நமக்கு இருக்க வேண்டாமா. வாழ்க்கைல நம்ம தேசத்துக்கு நான் உதவி செய்யறதுக்கு இதைவிட பெரிய வாய்ப்பு கிடைக்காது.

பாட்ரீஷியாவை அறிமுகப்படுத்தினதுக்கு நான் வேதமூர்த்திக்கு ரொம்ப தேங்க்ஸ் சொல்லணும். தயவுசெய்து அவ எதிர்க்க மூஞ்சியெல்லாம் காமிச்சிறாதே."

அவளுக்கு பாஷை புரியலைன்னாலும் முகபாவம் நன்னா புரியறது. எனிதிங் ராங் எனிதிங் ராங்க்னு உயிரை வாங்கறா. அவ மனசை நோகடிக்க வேண்டாம். அவ எடுத்துண்டிருக்கிற பெரிய வேலையைக் கெடுக்க வேண்டாம்.

இங்க இருக்கற தமிழன்ல எத்தனை பேருக்கு ராஜராஜ சோழன் பத்தி தெரியும். யாரால இப்படி ஒரு புக் கொண்டு வர முடியும்.

இந்த க்ஷணம் வரைக்கும், அவ கைக்காசு அவ அத்திம்பேர்கிட்ட கடன் வாங்கிண்டு வந்த காசு. புஸ்தகம் நன்னா வந்தா அமெரிக்கால நிச்சயம் வித்துரும். அப்படி வித்தா செலவழிச்சது மாதிரி பத்துமடங்கு லாபம் கிடைக்கும். புஸ்தகம் நன்னா வரணுமேன்னுதான் கவலைங்கறா. அதனால இவ்ளிக்கே பொண்ணு பார்க்கறதா இருந்தா நான் வரேன். வேற எதாவது நாள்னா நான் வரலை. தயவுசெய்து நீயே பெண்ணைப் பார்த்துக்கோ."

குமுதவல்லி திகைத்துப் போனாள்.

"உன்னைவிட ராஜராஜ சோழன் எனக்கு இம்பார்ட்டெண்ட். அவனுடைய பேர் இந்தப் பொண்ணு மூலமா இவ போட்டோ மூலமா உலகமெல்லாம் பரவப்போறது."

குமுதவல்லி ஆற்றாமை தாங்காமல் லேசான குத்தல் பேச்சில் இறங்கினாள்.

"வெள்ளை வெளேர்னு ஒரு பணக்காரப் பொம்மனாட்டி கூப்பிடறா. போகாத முடியுமா."

சங்கரராமன் அவளை உற்றுப் பார்த்தான்.

"கரெக்ட். நீ சொல்றது ரொம்ப கரெக்ட். வெள்ளைக்காரி கூப்பிடறா. நான் போறேன். போ."



"தயவுசெய்து கோச்சக்காதீங்கோ. என் நிலைமையைப் பாருங்கோ."

"வேணாம் குமுதவல்லி, நீ பேசாதே. நான் உன்னை ரொம்ப நல்ல பொம்மனாட்டின்னு நினைச்சிண்டிருந்தேன். நீ சாதாரணத்திலயும் சாதாரணம். உன் படிப்பு, கெட்டிக்காரத்தனம் எல்லாமே பொய். போலி. படிப்பறிவே இல்லாத ஒரு மூணாந்தர பொம்மனாட்டி மாதிரி பேசறே."

சங்கரராமன் கொஞ்சம் உரத்த குரலில் பேசினான்.

வீட்டிலுள்ள அனைவரும் வேலைகளை விட்டுவிட்டு அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"தொண்டைக்கு நடுவுல இன்னொரு கேள்வி இருந்தா அதையும் கக்கிடு. நீங்க அவகூட படுத்துண்டேளான்னா...அப்படீன்னு கேட்டுடு."

"ஏன் இப்படி அரக்கத்தனமா பேசறேள்."

"அரக்கத்தனமாவா. நான் பேசறேனா. நீ பேசறயா. குழந்தைக்கு சொல்ற மாதிரி சொல்றேன். உன்னையும் புரிஞ்சுண்டு பேசறேன். என்கிட்ட போய் வெள்ளைத்தோல் அது இதுங்கறியே."

"மன்னி, ப்ளீஸ் அண்ணாவை விட்டுங்கோ. அண்ணாவுக்கு இந்த வேலை கொடுத்ததே நான்தான். அந்தப் பொண்ணோட அக்கா, அத்திம்பேர் எனக்கு நிறைய செய்திருக்கா. நான் ஜுரமா இருந்தபோது ஆபீஸுக்கு லீவுபோட்டு உதவி செய்திருக்கா.

"அவா ரெண்டு பேரும் வந்து ரொம்ப கேட்டுண்டதால இதுக்கு ஒத்துண்டேன். பாட்ரீஷியா பண்றது ரொம்பப் பெரிய வேலை மன்னி."

"இன்னிக்கு பெண் பார்க்க வரலாமான்னு கேளுங்கோ. இல்லைன்னா நாம ரெண்டு பேரும் போலாம்."

"உங்களுக்குப் புரியலைப்பா. என் நிலைமை என்னன்னே உங்களுக்குப் புரியலை. ஆத்துக்காரர் இல்லாத ஒரு பொம்மனாட்டி மச்சினனுக்கு பொண் பார்க்கப் போகலாமா. எங்க உங்காத்துக்காரர் நீ மட்டும் ஏன் தனியா வந்திருக்கேன்னு கேட்டா என்ன காரணம் சொன்னாலும் நன்னா இருக்காது."

"அண்ணாவுக்கில்லாத அக்கறை மன்னிக்கு என்ன வந்தது அப்படீன்னு வெளிய வாசல்ல கேட்பாப்பா. ரொம்பக் கொடூரமான கேள்வி அது."

"ஒரு சபைக்கு போறபோது ஒரு சுமங்கலி பூ இல்லாத கூட போகலாம். புருஷனில்லாது போகக்கூடாது. எந்த சட்டத்தில எழுதி வச்சிருக்குன்னு கைதட்டி யாரும் கேட்க வேண்டாம். இது எழுதாத சட்டம். ஆனா எல்லாருக்கும் தெரிஞ்ச சட்டம்."

"ஒரு பொம்மனாட்டி புருஷனோட போனா அது மதிப்பே தனி. ஒரு வார்த்தைகூட பேசறத்துக்கு சபை பயப்படும். வரலையா. கொஞ்சம் காலை ஆட்டிண்டு கூட பேசும். உங்க வீட்டுக்காரர் உன்கூட சௌஜன்யமா இருக்காரோன்னோ...அந்தபக்கம் இந்தப்பக்கம் போக்குவரத்து இருக்கோன்னோ...அப்படீன்னு ஏகத்தாளம் பண்ணும்...அப்படி பேசினா வெட்டிக் கொன்னுருவேன்...அப்படீன்னு கத்தப்படாது. கத்தினா சந்தேகம் ஜாஸ்தியாகும்."

"நான் என் நிலைமையை சொல்லிட்டேன். அப்புறம் என்ன வேணா முடிவு பண்ணிக்கோங்க."

"மன்னி, அந்த பொண்ணு பேரென்ன, அவ அப்பா பேரென்ன" சட்டென்று மைத்துனன் ஆர்வம் காட்டினான்.

அவள் விவரம் சொன்னாள்.

"ஹலோ, நான் வேதமூர்த்தி பேசறேன். எங்க மன்னி உங்க வீட்டுக்கு பொண் பார்க்க வந்தாளாமே. இன்னிக்கு சாயந்தரம் நாங்க வரலாமா, நாங்கன்னா...நானும் எங்க அண்ணாவும். அஃப்கோர்ஸ், எங்க மன்னியும் வருவா. தடுக்குன்னு கேட்கறதுக்கு மன்னிச்சுக்கணும். எங்கண்ணாக்கு இம் பார்ட்டென்டான ஒரு வேலை இருக்கு. அவர் போனா வர்றதுக்கு ஆறேழு நாளாகும். அதனாலதான் இன்னிக்குன்னு சொல்றோம். தொந்தரவுக்கு மன்னிக்கணும்."

"சொஜ்ஜி, பஜ்ஜி சம்பிரதாயமெல்லாம் வேண்டாம். ஒரு கப் காபி போதும். பாடறது முக்கியமே இல்லை. பேசினா சந்தோஷம். ஒரு அரை மணி நேரத்துல போன் பண்றேளா."

பத்து நிமிடத்தில் போன் வந்தது.

மாலை ஐந்து மணிக்கு வரச் சொன்னார்கள்.

வீடு பரபரத்தது.

பாட்ரீஷியா தானும் வருவேன் என்று சொன்னபோது குமுதவல்லிக்கு அது பிடிக்கவில்லை. ஆனால் மறுக்க முடியவில்லை.

அவள் அங்கே கால்மீது கால் போட்டு உட்கார்ந்து கொள்ள தேவையில்லாது ஒரு அருசி பரவும் என்று தோன்றியது. ஆனால் அவள் பேச்சை செவி சாய்ப்பார் அங்கு யாருமில்லை.

"என்னடி க்ரஹசாரம். பொண் பார்க்கறத்துக்கு வெள்ளைக்காரியைக் கூட்டிண்டு வந்திருக்கா. இதெல்லாம் காதும் காதும் வச்சா மாதிரி நடக்கற ஃபங்ஷன். இப்படியா ஆள் கூட்டிண்டு வர்றது.

அமெரிக்கா மாப்பிள்ளையெல்லாம் வேண்டாம்னா கேட்க மாட்டேங்கறேள். மேற்கு மாம்பலத்திலேயே உனக்கு வரன் கிடைக்கும்டி. ஸ்டேட் பாங்க்கோ, எல்.ஐ.சியோ, ஜெனரல் இன்ஷுரன்ஸோ காலைல ஒன்பது மணிக்கு ஸ்கூட்டர்ல போயிட்டு அஞ்சு அம்பதுக்கு வீட்டுக்கு வந்துருவான். ஏழு மணிக்கு அயோத்யா மண்டபம் போய் ஆம்படையானும் பொண்டாட்டியும் உட்கார்ந்துக்கலாம். ஒன்பது மணிக்கு சாப்பிட்டுண்டே டி.வி. சீரியல் பார்த்துட்டு பத்துமணிக்கு கட்டிப் பிடிச்சுண்டு தூங்கலாம்."

கார்த்தால ஆறு மணி வரைக்கும் ஆம்படையான் பொண்டாட்டி ராஜ்யம்தான். எதுக்கு அமெரிக்கா அங்க போய் என்ன சாதிக்கப் போறோம். கவர்ல பால் கொண்டு வந்து கொடுக்கறான். மாடு வளர்த்து என்ன ஆகப்போறது."

பெண் வீட்டு பெரிசுகள் முகம் சுருக்கிப் பார்க்க குமுதவல்லி தானே வசனம் கற்பனை செய்து கொண்டாள்.

"உங்க பேர் என்ன சொன்னீங்க" மைத்துனன் அந்த நிசப்தத்தை தானே உடைத்தான்.

அந்தப் பெண் மெல்லிய குரலில் பதில் சொன்னாள்.

அவர்கள் இரண்டு பேரும் தள்ளிப் போய் பேசினார்கள்.

கேள்வி மேல் கேள்வி கேட்டு திணறடிப்பது போல் தள்ளி இருந்தவாளுக்குப் பட்டது.

அந்த மாமியிடம் சங்கரராமன் பாட்ரீஷியாவைப் பற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தான்.

"உங்களுக்கு ராஜராஜனைத் தெரியுமில்லையா. அவாளைப் பத்தின ரிஸர்ச். எங்கயோ இல்லினாய்ஸ்ல இருந்துண்டு மொத்த தமிழ்நாட்டையும் கரைச்சு குடிச்சிருக்கா."

அவன் சொல்ல சொல்ல அந்தப் பெண்ணின் தாயார் தலையாட்டிக் கொண்டிருந்தான். கடைசியாக ஒரு கேள்வி கேட்டான்.

"ராஜராஜன்னு சொல்றேனே அது ராஜா பேரா ஸ்வாமி பேரா..." மாமி நிதானமாகக் கேட்டாள்.

"என்ன கேட்கறேள். புரியலை."

"பெரிய கோயில்ல இருக்கற ஸ்வாமிக்கு பேர் ராஜராஜனா அதைக் கட்டின ராஜாவுக்கு பேர் ராஜராஜனா?"

சங்கரராமன் வாயடைத்துப் போனான். "தெரியலை மாமி. விசாரிச்சு சொல்றேன்."

பேசுவதை நிறுத்திக் கொண்டான். குமுதவல்லியை ஒருமுறை ஏளனமாகப் பார்த்தான்.

தமிழ்நாட்டிலுள்ள அத்தனை பெண்களுக்கும் மாமன்னன் ராஜ ராஜனைப் பற்றி அவசியம் தெரிந்திருக்க வேண்டும் என்று ஆசைப்படுவதில் தப்பில்லை. தெரியாது என்பதுதான் உண்மை. தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதுதான் நிஜம்.

அவர்கள் வீடு திரும்பினார்கள்.

"பொண்ணு சுமாரா இருக்கா மன்னி. எம்.எஸ்ஸி. படிச்சிருக்காளே தவிர இங்கிலீஷ் போதலை.

தமிழிலயும் பெரிசா ஞானம் இல்லை. இன்னும் கொஞ்ச நேரம் பேசலாமான்னு கேட்டேன். வேண்டாம் போறும்னு சொல்றா. என் மன்னி பொண்கள்ளாம் இப்படி இருக்கா.

"உனக்கு ரொம்பப் புடிச்சவா யாருன்னு கேட்டேன். யாரோ பிரபுதேவாங்கறா. யார் மன்னி பிரபுதேவா.

சினிமா...சினிமா...சினிமா. தமிழ்நாட்டுல இருக்கறவாளுக்கு சினிமா தவிர வேற ஒண்ணுமே தெரியலை.

எல்லா டி.வியும் அவிழ்த்துப் போட்டு ஆடறதுகள். பொழுதுபோக்கு வேணும்தான். கூத்து முக்கியம்தான். ஆனா எந்த நேரமும் கூத்தா ஒருத்தர் எப்படி இருக்க முடியும். அப்படி இருக்கறது ஆபாசம் இல்லை...

ஏதாவது ஒரு சப்ஜெக்ட்ல தரோவா இருக்கணும்னு தெரிய வேண்டாமா. அதுக்கு ஆசை வேண்டாமா. ஏன் எல்லா பத்திரிகையும் சினிமா பத்தியே பேசறது. நான் ரொம்ப நல்ல பத்திரிகைன்னு நினைச்சிண்டிருக்கறதெல்லாம் கூட கவர் ஸ்டோரி, புவர் ஸ்டோரின்னு ஏன் சினிமா புலம்பல்.

இந்த பொண்ணு அழகா இருக்கா மன்னி. கெட்டிக்காரியா இல்லை.

அடிக்கடி குனிஞ்சு தன் மாரையே பார்த்துக்கறா.

நான் இப்படி பேசறதுக்கு தயவுசெய்து மன்னிச்சுக்கணும்.

பொம்மனாட்டிக்கு அழகு புத்திசாலித்தனம். பொம்மனாட்டிக்கு ஆயுதம் தெளிவு. பேச்சில்லை.

பொம்மனாட்டியோட கவர்ச்சி உடம்பு அழகில்லை. கண்ணு, காது, மூக்கு இல்லை. அவளோட புரிஞ்சுக்கற திறன். ஒரு விஷயத்தைப் புரிஞ்சுக்கறதுக்கு அவ காட்டற பொறுமை.

எனக்கு அதெல்லாம் என்னென்னே தெரியாது...அப்படீன்னு ஒரு பெண் சொல்லக் கூடாது.

இப்பெல்லாம் என்ன புஸ்தகம் படிக்கறேன்னு அந்த பொண்ணைக் கேட்டேன். நான் ஒண்ணும் படிக்கிறதில்லைன்னு சொன்னாக்கூட பரவாயில்லை. ஏதோ ஒண்ணு படிக்கிறேன். எதுவும் மனசுல பதியமாட்டேங்கறது அப்படீன்னு அந்தப் பெண் சொல்றா.

என்ன பதில் மன்னி அது. என்ன அர்த்தம் இந்த பதிலுக்கு.

மனசுல பதியாத ஒரு படிப்பா. அதே மாதிரிதானே மத்த வேலையும் இருக்கும். மனசுல பதியாம தானே எல்லா வேலையும் சொல்ல முடியும்.

அப்ப இந்தப் பொண்ணு யாரு. ட்ரீமர். வெறும் கனவு காண்கின்ற நபர்.

கனவு காண்கின்ற நபரால் வாழ்க்கையை செம்மையாய் நடத்த முடியாது. செய்...அல்லது செத்து மடி என்கிற வீரம் வராது. இந்த வீரம் இல்லாது போனால் வாழ்க்கை பயனுடையது அல்ல.

பயனற்ற வாழ்க்கை பிறருக்கு பாரம்.

தானும் சந்தோஷமாக இல்லாமல் பிறத்தியாரையும் சந்தோஷப்படுத்தாமல் ஒரு வேதனையான ஜென்மமாய் இவர்கள் போய் விடுவார்கள்.

உள்ளொன்றும், புறமொன்றுமாய் இரண்டு வாழ்க்கை வாழ்வார்கள். ஆசைப்பட்டது மடியில் வந்து விழ வேண்டுமென்று பிரார்த்தனை செய்வார்கள். இவர்கள் உண்ணவும் தெரியாதவர்கள். எப்போதும் கவலையாய் இருப்பவர்கள்.

தன்னுள் இருப்பதை வெளியே சொல்லாதவர்கள். இவர்களைப் புரிந்து கொள்வது கடினம். தன்னை வெளிப்படுத்த இவர்கள் பயப்படுவார்கள். இவர்களோடு குடித்தனம் செய்வது மிக மிகக் கடினம்.

எனக்கு இந்தப் பெண் வேண்டாம், மன்னி. நான் அவளை எடை போட்டதாய் சொல்லவில்லை. ஆனால் நோய்த்தனமாகத் தெரிகிறது.

மாம்பலத்தில் எங்கெல்லாம் தனியாகப் போவாய் என்று கேட்டேன். கோவிலுக்கு மட்டும்தான் என்று சொல்கிறது.

எனக்குப் பிடிக்கவில்லை மன்னி. என் எல்லா கணிப்புகளுமே தவறாக இருக்கலாம். தயவுசெய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். வேறு பெண் பாருங்கள்."

"நாம் பாட்ரீஷியாவைக் கூட்டிக் கொண்டு போனது அவ்வளவு நல்லதல்ல" குமுதவல்லி வெறுப்போடு சொன்னாள்.

"நான் வேண்டுமென்று கூட்டிப் போனேன் மன்னி. அந்த வீடு அன்னிய தேசத்தவர்களை எப்படிப் பார்க்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்பினேன்."

"அந்த வீட்டிற்கு அன்னிய தேச மனிதர்களோடு பரிச்சயமில்லை."

"இந்த வீடு அதிகம் மிரளும். அமெரிக்காவுக்கு பெண்ணை அனுப்புகிறபோது வாய்க்கரிசி போடும். ஏதோ காட்டிற்கு அனுப்புவது போல் கதறும்.

காக இருக்கிறது மன்னி, கல்ச்சர் இல்லை. அதாவது நாம் எதிர்பார்க்கும் கல்ச்சர் இல்லை. இந்தப் பெண் மாம்பலத்திலேயே புருஷன் தேடிக் கொள்வது அவளுக்கும் நல்லது. அவள் தாய்க்கும் நல்லது.

உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். கோபப்படாதீர்கள். உங்களை அவமானப்படுத்தி விட்டதாக நினைக்காதீர்கள். நீங்களும் அண்ணாவும் எனக்கு தெய்வத்துக்கு சமம்.

தெய்வத்தின்பொருட்டு கூட என் வாழ்க்கையை நான் இழக்கத் தயாராக இல்லை.

உங்களை தர்மசங்கடத்தில் ஆழ்த்தி விட்டேன் என்று நன்றாகத் தெரிகிறது. அவர்களிடம் நானே பேசுகிறேன்.

ஆனால் அவர்கள் ஒரு முடிவுக்கு வரும் முன்பு போன் மணி அடித்



அந்தப் பெண்ணின் தாயார் பேசினாள்.

வேதமூர்த்தி இருக்காரா என்று கேட்டாள்.

வேதமூர்த்தி டெலிபோனில் தன் பெயர் சொல்லிவிட்டு ஸ்பீக்கரை ஆன் செய்தான்.

"நான் அந்தப் பொண்ணோட அம்மா பேசறேன். நீங்க தயவுசெய்து வேற இடம் பாருங்கோ சார். நாங்க வேற...நீங்க வேற சார். தப்பா எடுத்துக்காதீங்கோ. ஆல் த பெஸ்ட். குமுதவல்லியை வந்துண்டு போயிண்டிருக்கச் சொல்லுங்கோ."

''ஐ விஷ் யூ த ஸேம். நிச்சயமா சொல்றேன்'' வேதமூர்த்தி இணைப்பைத் துண்டித்தான்.

குமுதவல்லிக்கு ஏனோ அழுகை வந்தது. சமையலறைக்குப் போய் சத்தமில்லாமல் அழுதாள்.

மறுநாள் புருஷனும் பாட்ரீஷியாவும் குழந்தைகளோடும் மைத்துனன் வேதமூர்த்தியோடும் காஞ்சிபுரம் போனார்கள்.

அவளைக் கூப்பிட்டபோது உடம்பு சரியில்லை என்று மறுத்து விட்டாள். அவளுக்கு மனம் சரியில்லை என்று எல்லோருக்கும் தெரிந்தது.

காஞ்சிபுரத்திலிருந்து வந்து இறங்கி அவசரம் அவசரமாக பெட்டிகளை அடுக்கிக் கொண்டு மைசூர் ட்ரெயினுக்குக் கிளம்பினார்கள்.

உன் புருஷன் ஒரு அற்புதமான மனிதன். ஞானி. படிப்பாளி. பண்பாளன். மிகமிக கெட்டிக்காரன். ஆனால் கர்வமே இல்லாதவன்.

அடுத்த பிறவியில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால் அடுத்தபடி பிறக்க வேண்டும் என்கிற ஆசை உண்டு. அப்போது உன் புருஷனே எனக்கு தந்தையாக வேண்டும். நீ எனக்கு தாயாக வேண்டும் என்று அன்னை மேரியை வேண்டுகிறேன். செயிண்ட் பீட்டரைக் கேட்கிறேன்.

உன் குடும்பம் ஆசிர்வதிக்கப்பட்ட குடும்பம். கடவுள் உன் வீட்டில் சூட்சும ரூபத்தில் குடியிருக்கிறார். நீ இன்னும் உயர்ந்த நிலைக்கு போவாய். இது என் ஆசை. என் பிரார்த்தனை.

உன் எல்லா உபசரிப்புக்கும் நன்றி."

அவள் கட்டித் தழுவி கன்னங்களில் ஏகப்பட்ட முத்தங்கள் பதித்து விட்டு போனாள்.

குழந்தைகளும் வேதமூர்த்தியும் சென்ட்ரல் ஸ்டேஷன் வரை கொண்டு போய் விட்டுவிட்டு வந்தார்கள்.

குமுதவல்லி இயந்திரம் போல சமையல் செய்தாள். அவளுக்கு எதிலும் பிடிப்பு இல்லாமல் போயிற்று.

மறுநாள் இந்து அலுவலகத்திலிருந்து இன்னும் ஒரு கத்தை விண்ணப்பங்களோடு கவர் கொடுத்து விட்டு போனான்.

அதைப் பிரிக்கக் கூட செய்யாமல் மைத்துனன் கையில் கொடுத்து விட்டு மளிகைக் கடைக்கு போனாள்.

வரும்போது மைத்துனன் மூன்று விண்ணப்பங்களை தேர்ந்தெடுத்து வைத்திருந்தான்.

அவனே மூன்று இடத்திற்கும் டெலிபோன் செய்தான். ஏதோ பேசினான் என்று தெரிந்ததே தவிர என்ன பேசினான் என்று தெரியவில்லை. என்ன பேசினான் என்று அவளும் கேட்கவில்லை.

குமுதவல்லியின் அப்பா பிற்பகலில் ஸ்கூட்டியில் வந்து இறங்கின
குமுதவல்லியின் மைத்துனனோடு ஆரவாரமாய் பேசினார்.
அவன் கொடுத்த பேனாவை வாங்கி சொருகிக் கொண்டார். ச
லேட் கொண்டு வந்திருக்கறயா என்று கேட்டு வாங்கி சாப்பிட்டார்.
அவன் தூங்கப் போனதும் சமையலறையில் வந்து அமர்ந்து கொ
டார்.

"என்ன. இன்னும் மச்சினனுக்கு பொண்ணு தேடி முடியலையா

"நான் ஒன்னு பார்த்தேன். எம் மனசுக்கு நன்னாப் பட்டது. அவ
என்னமோ சித்துன்னுட்டான். நீயே பார்த்துக்கடாப்பான்னு விட்டு
டேன்."

"வெரிகுட். அதுதான் நல்லது."

"ஏம்பா."

"அவன் கல்யாணத்தை அவன் பார்த்துக் கட்டும்மா. நீ தலை
விடாதே."

"ஏம்பா."

"உனக்கு கெட்ட பேர் வரும்."

"அதான் வந்துடுத்தே. மேற்கு மாம்பலத்துல என்னைப் பார்த்து
எல்லாரும் மூஞ்சி திருப்பிக்கறாளே."

"பொண்ணு பார்த்தா பிடிக்கலைன்னு சொல்லக்கூடாதா. சொன்ன
கொலைக்குத்தமா. கொஞ்சநாள் சிரமமா இருக்கும். இதைவிட நல்ல வர
கிடைக்கும்னு மனசை தேத்திண்டுருவா. நான் சொல்றது வேற கெட்ட
பேர். மச்சினன் விஷயத்திலேர்ந்து தள்ளியே இரு"

"எதை வச்சு இப்படி சொல்றேப்பா"

"அவன் ஜாதகத்தைப் பார்த்தேன், சொல்றேன்."

"அவன் கேரக்டர் சரியா இல்லையா."

"அவன் கேரக்டர் சரியா இல்லையா."

"எல்லாத்தையும் உடைச்சு சொல்ல முடியாது குமுதவல்லி. உனக்கு
"எல்லாத்தையும் உடைச்சு சொன்னா சரின்னு கேட்டுக்கோ
நான் கெடுதல் சொல்வேனா சிலது சொன்னா சரின்னு கேட்டுக்கோ
ஆதித்ய ஹிருதயம் ஸ்தோத்திரம் படிக்கறயா. அதுபடி உனக்கு கெட்ட
பெயர் வராம காப்பாத்தும். வீட்ல சண்டை சச்சரவு வராம இருக்கும்."

"என்னப்பா ரொம்ப பயமுறுத்தறே"

"வாழ்க்கைன்னா ரெண்டும்தான் இருக்கும் குமுதவல்லி. நீ பண்ணின
"வாழ்க்கைன்னா ரெண்டும்தான் இருக்கும் குமுதவல்லி. நீ பண்ணின ஓமப்பொடி நன்னாயிருக்கு. ஒரு பிளாஸ்டிக் கவர்ல போட்டுக்கொடு
பார்க்குக்கு போறபோது சாப்பிடலாம்."

அப்பா கேட்டு வாங்கிக் கொண்டு போனார்.

அறுபத்தாறு வயதில் தீனிப்பண்டாரமாய் இருந்தார்.

கிழம் சும்மா என்னமோ பயமுறுத்தறது. மதிக்கறதுக்கு ஆள் இல்
லேன்னா இவா படங்காட்டறதுக்கு ஜோஸ்யத்தைக் கையில எடுத்
துண்டுடுவா.

குமுதவல்லி தந்தையை இளக்காரமாக நினைத்தாள்.

இன்னும் ஐந்து நாட்கள் ஓடின.

புருஷன் டெல்லியிலிருந்து சென்னைக்கு வந்தான். பாட்ரீஷியா
அப்படியே அமெரிக்காவுக்கு போய் விட்டாளாம்.

தாஜ் மஹாலுக்கு முன்னால் கல் பெஞ்ச்சில் அவர்கள் இருவரும்
நெருக்கமாய் உட்கார்ந்து கொண்டிருந்த போட்டோ காண்பித்தான்.



"என்ன தோணறது..." குமுதவல்லியைப் பார்த்து கண் சிமிட்டினான்.

"ஒரு ரெண்டங்குலம் தள்ளி உட்கார்ந்திருக்கலாம்."

"ஒரு ரெண்டங்குலம் தள்ளி உட்கார்ந்திருக்கலாம்." அவன் போட்டோவைத் திருப்பிக் காட்டினான்.

'என் குருவுக்கு, அன்புடன்' என்று எழுதப்பட்டிருந்தது.

அவள் கண்ணில் ஒற்றிக் கொண்டு படத்தைத் திருப்பிக் கொடுத்து
விட்டாள்.

அன்று மாலை வீட்டு வாசலில் கார் நிற்கும் சத்தம் கேட்டது.

ஒரு இருபத்தியாறு வயதுப் பெண் கீழே இறங்கினாள். கொஞ்சம்
முதிர்ந்தவளாகத் தெரிந்தாள். பட்டுப் புடவையும் கைப்பையுமாக இறங்கிய
போது ஏதோ கம்பெனி அதிகாரி போல் காணப்பட்டாள்.

வேதமூர்த்தி யார் என்று விசாரித்தாள்.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்து உட்காரச் சொன்னதும் அஜாக்
போடு சுதந்திரமாய் தொப்பென்று உட்கார்ந்தாள்.

"டிசம்பரும் வெய்யிலாதான் இருக்கு இல்ல..."

"கார் ஏஸி பண்ணலேன்னா? மெட்ராஸ்ல கார் ஓட்டவே முடியாது"
என்று அலுத்து கொண்டாள்.

வேதமூர்த்தி மாடியிலிருந்து இறங்கி வந்தான்.

அவள் கை கூப்பினாள். நாலடி முன்வந்து கை குலுக்கினாள்.

"நான் பத்மஜா. உங்களை மணப்பதற்காக விண்ணப்பம் போட்டிருந்
தேன். நேற்று என் தாயோடு போனில் பேசினீர்கள். என்னை சந்திக்க
விரும்பினீர்களாம். நானும் உங்களை சந்திக்க ஆவல்பட்டேன். தியாகராய
நகர் வந்தபோது ஆவலோடு இந்தப்பக்கம் திரும்பிவிட்டேன்.

நான் வந்தது தவறென்றால் மன்னிக்கவும். ஐந்து நிமிடத்திற்கு மேல்
எடுத்துக் கொள்ள மாட்டேன். அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் எங்களுக்கு
ஆறேழு உறவினர்கள் இருக்கிறார்கள்.

அவர்களைப் பற்றிய விவரங்கள் இந்தக் கடிதங்களில் இருக்கின்றன.

உங்கள் அண்ணா இருக்கிறாரா... அவரைப் பற்றி மேற்கு மாம்பலத்
தில் பலரும் உயர்வாய் சொல்கிறார்கள். ஆன்மீகக் கட்டுரைகள் எழுதுகிறா
ராமே. இது மன்னியா."

கோடைமழை போல இடைவிடாமல் ஆங்கிலத்தில் பேசி தீர்த்தாள்.
விடைபெற்றுக் கொண்டு போனாள். அவள் கார் சீறலுடன் தெரு திரும்பி
மறைந்தது.

"அண்ணா, மன்னியோடு இந்தப் பெண் வீட்டுக்கு போய் பேசுங்க
ளேன். கிழக்குத் தாம்பரம் எங்கிருக்கிறது." ஆவலாய் கேட்டான்.

குமுதவல்லியின் மைத்துனன் ஆவலாய் கேட்டான்.

மறுநாள் போய் பேசினார்கள். அதற்கு அடுத்த நாள் சம்மதம் தெரி
வித்தார்கள். மூன்றாம் நாள் அந்தப் பெண் வீடு சம்மதத்தை ஏற்றது. நான்
காம் நாள் மைத்துனனும் அந்தப் பெண்ணும் மறுபடி சந்தித்துக் கொண்
டார்கள். ஐந்தாம் நாள் சீர்வகைகள் பேசுவது பற்றி அவர்கள் வீடு இவர்கள்
வீட்டுக்கு வந்தது. பேசியது.

"நகை நாற்பது பவுன் போடறோம். கல்யாணம் சிம்பிளா நடத்தலாம்.
என்னடா இவ்வளவு குறைச்சலா பேசறாளேன்னு யோசிக்காதீங்கோ. இங்கே
காசு புரட்டறதைவிட அமெரிக்காவுல எங்களுக்கு காசு புரட்டறது சுலபம்.
ஆறு லட்ச ரூபாய்க்கு சமானமா அமெரிக்கால டாலர் தர்றோம்.

இப்பவே வேணா மாப்பிள்ளை அக்கௌண்ட்ல மாத்திடறோம்.

அல்லது எங்க பொண் அங்க போனதும் அக்கௌண்ட் ஓபன் பண் அவ பேரில கணக்கு வைக்கச் சொல்றோம்.”

“அவன் வந்த பிறகு கொடுங்கள்.” மைத்துனன் சொல்லிவிட்டா

“திருப்பதியில் கல்யாணம். நியூ உட்லண்ட்ஸில் ரிஸப்ஷன். ஒரு நா இந்த வீட்டில் விருந்து; மறுநாள் பெண் வீட்டில் விருந்து. பிறகு மா பிள்ளையும் பொண்ணும் சிங்கப்பூருக்கு ஹனிமூன் போகட்டும்.

அங்கும் பொண்ணுக்கு உறவினர்கள் உண்டு. பத்துநாட்கள் இருந் திரும்பலாம்.

டெல்லியில் சொல்லி டூரிஸ்ட் விசா வாங்கி விடலாம். அங்கு போ ஆறுமாதம் இருந்த பிறகு மறுபடியும் இங்கு வந்து வேறு விசாவுக் விண்ணப்பித்து இந்த ஜென்மம் முழுவதும் அமெரிக்காவிலேயே இருக்கு படி செய்யலாம்.”

புரண்டு புரண்டு ஒரு அலை வந்து மேற்கு மாம்பலத்தில் புகுந் எல்லா இடமும் சமுத்திரமானது போல குமுதவல்லி உணர்ந்தாள்.

அந்தப் பெண் வீடு துரிதமாய் முடிவுகள் எடுத்தது. விரைவா செயல்கள் முடித்தது. மணமகனான வேதமூர்த்தியைத் தவிர வேறு யாரோ டும் அதிகம் பேச மறுத்தது.

உங்க மன்னி சொல்றது இருக்கட்டும். வேதமூர்த்தி நீ என்ன சொல்றே. நீ ரூபா சொல்லு. அடுத்தது நான் பார்த்துக்கறேன்.”

“என் மச்சினர் கல்யாணத்துக்கு நான் புடவை எடுத்துக்கறேன். நீங்க சிரமப்படவேண்டாம்.” குமுதவல்லி அழுத்தலாய் பேசினாள்.

“அப்பசரி...” அவர்கள் தடேலென்று கைவிட்டார்கள்.

குமுதவல்லி உள்ளுக்குள் அவமானப்பட்டாள். அவள் புருஷன் சங்கரராமன் புரிந்து கொண்டான்.

இரவு அவளை அணைத்துக் கொண்டு தலை கோதிவிட்டான்.

“குமுதவல்லி, இவா புதுப்பணக்காரா. இப்படித்தான் இருப்பா. ஒரு பத்து வருஷம் முன்ன அதாவது இவா குழந்தைகள் தலையெடுக்கறதுக்கு முன்னால இவா வீடு அம்பதுக்கும் நூறுக்கும் அல்லாடிண்டிருந்தது.

இப்ப மூணு பையன்கள். மூணு திசையில போய் சம்பாதிக்க வீட்ல காசு வந்து குவியறது.

அதனால தாங்கள் ரொம்ப கெட்டிக்காரா, தங்களுக்கு எல்லாம் தெரியுங்கற மாதிரி பேசறா. இவாள்ளாம் உனக்கு அடங்கி இருக்கணும்னு நினைக்காதே.

நரி இடம் போனா என்ன... வலம் போனா என்ன... மேலே விழுந்து பிடுங்காம இருந்தாசரி.

அலட்டலா இப்ப பேசறவா அதிகாரமாவும் பின்னால பேசுவா. அலட்டல்தான் ஆணவத்தினுடைய ஆரம்பம். அதிகாரம்தான் ஆணவத்தின் உச்சக்கட்டம். தயவு செய்து இங்க மாட்டாதே.

நீ பார்த்தியே ஒரு பொண்ணு அவ உனக்கு சரி. அவனுக்கு சரியில்லை. அவனுக்கு சரியா இருக்கற பொண் உனக்கு பாந்தமா இருக்க மாட்டா.

இது அவன் கல்யாணம். அவனே பார்த்துண்டுட்டான் விடு.”

“சபையில என் பக்கத்துல நின்னு சிரிச்சுண்டே அட்சதை போட்டுண்டு, வாங்கோ வாங்கோ போங்கோ போங்கோன்னு மேலோட்டமா பேசிண்டிரு.



இவா தமிழையே இங்கிலீஷ்ல பேசற குடும்பம். ஆழமில்லாத மனுஷா.

பாட்ரீஷியா ஒரு தடவை கூட அமெரிக்கா பத்தி அலட்டலா பேசலை. அமெரிக்கா பத்தி அபிப்பிராயம் சொல்லு- அப்படின்னபோது ரொம்ப அழகா ஒன்னு சொன்னா.

“அமெரிக்கா மிக இளமையானது. துள்ளுவது ஆறுமாதம் முன்பு மீசை முளைத்த இளைஞன் போல அலட்டுவது. முதிர்ச்சியில்லாதது. ஆழ்ந்து எதுபற்றியும் யோசிக்காத தேசம் அது.

இந்தியா கிழவி. நன்கு வாழ்ந்து இன்ப துன்பங்கள் பார்த்து அமைதியான கிழவி. இவளிடம் இருப்பது வெறும் அறிவல்ல; ஞானம். ஞானம் அறிவாளிகளுக்குப் புரியாது.”

நான் நெகிழ்ந்து அழுதுவிட்டேன். அந்த பாட்ரீஷியா என் முதுகைத் தடவிக் கொடுத்து சமாதானம் செய்தாள்.

அந்த பாட்ரீஷியாவுக்கு இந்தியா தெரிந்த அளவு இவர்களுக்குத் தெரியாது. நான் என் தம்பி வேதமூர்த்தியையும் சேர்த்து சொல்கிறேன்.

இவர்கள் காசு சம்பாதிக்க கச்சைக் கட்டிக் கொண்டு கிளம்பி விட்டார்கள். ஆனால் எதை இழக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

என்னால் அமெரிக்காவுக்குப் போக முடியாது. உன்னால் வருஷக் கணக்கில் எனக்காக காத்திருக்க முடியாது. நான் இல்லாமல் தூங்க முடியாது. இது காமம் அல்ல. காதல். ஒரு மரபின் மீது காதல். நம் தேசத்தில் மனைவிதான் மரபு. முகம் தூக்கி வைத்துக் கொள்ளாதே. ஜாலியாக இரு.”

ஆனால் தாலி கட்டியபிறகு சாப்பிடக்கூட யாரும் கூப்பிடவில்லை. நகைகளைக் கொண்டு காட்டவில்லை. யார் என்ன உறவு என்று அறிமுகப் படுத்தவில்லை. அவர்களுக்குள்ளேயே கூடிக் கூடி சிரித்துக் கொண்டார்கள்.

மாப்பிள்ளை மட்டும் வந்தா போறாதா. நீங்கள்ளாம் எதுக்கு என்பது போல் பார்த்தார்கள். அந்த வீட்டில் எல்லோரிடமுமே ஒரு முதிர்ச்சி யின்மை தெரிந்தது.

எல்லோருமே ஆங்கிலத்தில் பேசினார்கள். குழந்தைகளைக் கூட ஆங்கிலத்தில் கொஞ்சினார்கள். தமிழில் பேசுவது பாவம் என்பது போல் நடந்து கொண்டார்கள்.

எனக்கு தமிழெல்லாம் தெரியாதுப்பா என்பது போல் நடித்தார்கள். அந்த வீட்டுப் பக்கம் ஏழ்மையான உறவுகளை சற்றுப் பின்னே நிற்க வைத் தார்கள்.

கல்யாணம் ஏதோ கசாமுசா என்று முடிந்தது. வேத மந்திரங்கள் முழுமையாக நடைபெறவில்லை என்பது தெரிந்தது.

அந்த வீட்டுப் பெண்கள் ரிஸப்ஷனில் வேறு விதமாய் ஜொலித் தார்கள்.

குஜராத்திப் பெண்கள் போலவும், மார்வாடிப் பெண்கள் போலவும் தலையில் முக்காடு போட்டு வந்தார்கள். வலது பக்க தலைப்பு போட்டுக் கொண்டார்கள். ஒரே அரிதாரமாய் நின்றார்கள். ஆண்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கொஞ்சினார்கள்.

குமுதவல்லி வீட்டுக்கு வெறும் பத்துபேர் மட்டும் வந்திருந்தார்கள். குமுதவல்லியும் அதேபோல பத்து பேரோடு அந்த வீட்டு விருந்திற்கு போனார்கள்.

கல்யாணத்திற்கு வந்த மாமனாரும் மாமியாரும் நாத்தனார்களும் அவர்கள் துணைவர்களும் மறுபடி தத்தம் இடங்களுக்கு ஓடினார்கள்.

தம்பதிகள் சிங்கப்பூர் போனார்கள். பத்து நாளில் திரும்பினார்கள்.
மைத்துனர் ஊருக்குப் போக இன்னும் பத்துநாட்கள் இருந்தன. அதுவரை
மனைவியோடு மாடியில் குடித்தனம் செய்தான்.

"இந்த பத்து நாளும் நான் மாடில தனி சமையல் பண்ணிக்கட்டுமா"
அந்த பத்மஜா கேட்டபோது குமுதவல்லி சரேலென்று முறைத்தாள்.

"உன் சமையல் சாமர்த்தியமெல்லாம் அமெரிக்கால வச்சுக்கோ. ஒரு
பத்து நாள் எந்த டிராமாவும் போடாம இரு."

"டேய் வேதமூர்த்தி ஒரு தடவை மருவூர் போயிட்டு வரணும்டா.
நம்மாத்துல யாருக்கு கல்யாணம் ஆனாலும் அங்க போய் அர்ச்சனை பண்
றது ஒரு மரபு."

"எனக்காக நீ போயிட்டு வாயேன் அண்ணா. இங்க இவாபக்கமு
நாலஞ்சு பேர் வீட்டுக்கு போயிட்டு வரணும்."

அவன் மறுத்து விட்டான்.

"நீ சொல்லு மருவூர் போறது நல்லதுன்னு" குமுதவல்லி பத்மஜாவை
விரட்டினாள்.

"மருவூர் ரொம்ப சின்ன கிராமமாமே" பத்மஜா நகம் கடித்தாள்.

"அதனாலென்ன."

"லெட்ரீன்லாம் வயல்தானாமே."

"அதனாலென்ன.."

"ஸாரி. எனக்கும் போறதுக்கு இஷ்டமில்லை."

அடுத்த பத்துநாளில் அவர்கள் விடைபெற்று பம்பாய் போனார்கள்.
பம்பாயில் ஒரு நாள் தங்கி யார் வீட்டிலோ விருந்து சாப்பிட்டு விட்டு
லண்டன் வழியே அமெரிக்கா போனார்கள்.

'வீடு புயலடித்து ஓய்ந்தது போல் இருந்தது. கல்யாணத்திற்கு சாட்சி
யாய் பெரிய ஆல்பம் மட்டுமே வீட்டில் இருந்தது.

புருஷனோடு புருஷனின் மூதாதையர்கள் ஊரான திருக்காட்டுப்
பள்ளிக்கு அருகே இருக்கும் மருவூருக்கு குமுதவல்லி குழந்தைகளோடு போய்
வந்தாள்.

புதிதாய் நாற்று நட்டிருந்தார்கள். கண்ணுக்கெட்டிய வரையில் வயல்
இருந்தது. வயல் முழுவதும் நீர் நிலவொளியில் தகதகத்தது.

நிலவுலாவு நீர் மலிவேலியன்

சங்கரராமன் மகிழ்ச்சி பொங்கப் பாடினான்.

மேலே பளிச்சென்று பவுர்ணமி நிலவு. நான்கு திசைகளும் நீர் சூழ்ந்த
நெல் வயல்கள். அந்த நீரில் பட்டுத் தெறிக்கும் பிரகாசமான நிலவொளி.
குளுமையான காற்று. புல்லின் நறுமணம். பூக்களின் வாசம்.

எல்லா இடத்திலும் சூழ்ந்த இந்த மிருதுவான ஒளிதான் கடவுள்
என்று சொல்லப்படுகிறது. கடவுள் இப்படித்தான் இருப்பார் என்று நம்பப்
படுகிறது.

மறுநாள் மருவூர் மஹாமாயா என்கிற மாரியம்மனுக்கும், காத்தவராய
னுக்கும், கருப்புக்கும், மருவூர் சாம்பான் என்கிற தேவதைக்கும் அபிஷேக
அர்ச்சனைகள் நடத்தினார்கள்.

கதம்ப சாதம் செய்து வந்திருந்த குழந்தைகள் பெரியவர்கள் அத்தனை
பேருக்கும் பெரிய பெரிய வாழைச் சருகில் வைத்து தானம் செய்தார்கள்.
குழந்தைகளுக்கு சாக்லேட் கொடுத்தார்கள். பெரியவர்களுக்கு இரண்டு
ரூபாய் காக கொடுத்தார்கள்.





மருவூர் பசுபதிநாதர் கோயிலுக்கும் வேணுகோபாலஸ்வாமி கோ
இருக்கும் மலர் மாலைகள் போட்டு வழிபட்டார்கள். கண் மூடி தியா
செய்தார்கள்.

"எங்கள் அறிவையும் திறனையும் வளர்த்தது இந்த பூமி.

எங்கள் ஞானத்திற்குக் காரணம் இந்த மண்.

எங்கள் நாகரீகத்திற்குக் காரணம் இந்தக் காவிரியாறு.

நாங்கள் குழந்தை பெற்று நல்ல குடும்பமாய் வாழக் காரணம் இ
ஊர்க்காவல் தேவதை.

இங்கே சூட்சும ரூபத்தில் இன்னும் குடியிருக்கும் இந்த மூதாதைய
கள் என் குடும்பத்தை ஆசிர்வதிக்கட்டும். எங்கள் வழித் தோன்றல்களை
ஆசிர்வதிக்கட்டும். உலகின் எந்த மூலைக்குப் போனாலும் இங்கே வந்
இந்த தேவதைகளை வழிபடும், இந்த தெய்வங்களை ஆராதிக்கும் நல்
குணம் எங்களை நீங்காமல் இருக்கட்டும்.

மருவூர் மண்ணே, சோழ தேசமே தாய்க்கு நிகரான தமிழ் நாடே
'திராவிட தேசமே, பரதக் கண்டமே, பூமா தேவி உன்னை வணங்குகி
றேன்."

சங்கரராமன் மருவூர் மண்ணை எடுத்து நெற்றியில் பூசிக் கொண்
டான்.

மருவூர் சாம்பான் கோயில் படியில் அமைதியாய் உட்கார்ந்து கொண்
டான். காதலோடு அந்த தெய்வத்தைக் கவனித்தான்.

எல்லோரும் ஊர் திரும்பினார்கள்.

மனதில் இனம் புரியாத ஒரு நிறைவு ததும்பி நின்றது.

அவள் மைத்துனனை மறந்து தன் வீட்டில் கவனம் செலுத்தினாள்.

கோவிலில் பார்த்த பெண்ணுக்குத் திருமணம் என்று பத்திரிகை
கொண்டு வந்து கொடுத்தார்கள். மணமகனுக்கு ரிஸர்வ் பாங்கில் வேலை.
பெஸன்ட் நகரில் வீடு என்றார்கள்.

'உங்க பொண் சௌக்கியமா இருப்பா, மாமி.' எங்க போனாலும்
ஓஹோன்னு வாழ்க்கை நடத்துவா. இந்தக் கல்யாணம் நன்னா நடந்தா நான்
பிள்ளையாருக்கு மூணு சிதறுகாய் விடறேன்.

வேற ஏதாவது கல்யாண வேலை இருந்தா சொல்லுங்கோ. கூட
வந்து செய்யறேன்."

"குமுதவல்லி, குமுதவல்லி..." அந்த மாமி உணர்ச்சி பொங்க அணைத்
துக் கொண்டாள். தேவதை மாதிரி பேசறேடி. இங்க வந்து குடித்தனம்
பண்ண எங்காத்துப் பொண்ணுக்கு கொடுப்பினை இல்லை."

"வேண்டாம் மாமி. நாம வேறே. எங்க மச்சினர் வேறே.

உங்க பொண்ணுக்கு எங்க மச்சினர் சம்பந்தம் அவ்வளவு சரிப்பட்டு
வராது. மெட்ராஸ் ரிஸர்வ் பாங்க் தான் சரி. பெஸன்ட் நகர் தான் உத்தமம்.
எங்கப்பாக்கிட்ட சொல்லி நான் வருத்தப்பட்டேன். வருத்தமே படாதே.
எல்லாம் நல்லதுக்குன்னு சொல்லிட்டார்.

சொல்லுங்கோ. நான் என்ன உதவி பண்ணட்டும் கல்யாணத்துக்கு."

நாலு நாட்கள் கழித்து அந்த வீடு டெலிபோன் செய்து கூப்பிட்டது.
நாற்பது புடவைகள் கடையிலிருந்து வரவழைத்து நான்கு புடவைகள் தேர்ந்
தெடுத்துக் கொடு என்று கேட்டது.

"சீர் முறுக்கு, லட்டு, அதிரஸம். இதுக்கு ஏதோ 'ஸ்வீஸ்வாத்'னு ஒரு
இடம் இருக்காமே. தியாகராயநகர் வெங்கட்ராமன் தெருவாமே.. கொஞ்சம்



வரயா. கொஞ்சம் விலை பேசி ஆர்டர் கொடுத்துட்டு வரலாம்."

குமுதவல்லி கூடப்போய் வந்தாள்.

நகைக்கடையில் கல் நகைகளுக்காக இரண்டு மணிநேரம் செலவிட்
டாள். மிக கவனமாய் வெள்ளிப்பாத்திரம் வாங்கினாள்.

அந்த வீடு அவளை உடும்புப் பிடியாய் பிடித்துக் கொண்டது. இரவு
பதினோரு மணிக்கு போன் செய்தது. விடிகாலை வந்து விவரம் கேட்டது.

மைத்துனன் கல்யாணத்தில் கிடைக்காத மரியாதை மொத்தமும்
இங்கே அனுபவித்தாள். "கேள்விப்பட்டேன். நீங்கதான் குமுதவல்லியா. உங்க
வீட்டுக்காரர்தான் பேப்பர்லல்லாம் ஆன்மீகக் கட்டுரை எழுதறாரா. எங்க
வீட்டுப் பிள்ளை உங்க புருஷனைப் பத்தி சொல்லுவான். நீதான் கூட
இருந்து எல்லாம் பார்த்துக்கறயாமே?"

"யார் செய்வா இப்படி. உலகத்துல நல்ல மனுஷா சிநேகிதம் கிடைக்
கறது ரொம்ப கஷ்டம். கிடைச்சா விடப்படாது. அண்ணா தம்பிகளே ஒருத்
தரையொருத்தர் ஏமாத்திக்கறபோது உன் லாக்கர்ல பதினைஞ்சு நாள் கல்
யாணப் பொண்ணோட நகை வச்சிருந்தியாமே." மாப்பிள்ளை வீடு பாராட்
டியது.

"நூறு பவுன் போடறேன்னா குமுதவல்லி. நான்தான் ஒட்டு மொத்
தமா போடாதே. தேவையில்லாத கண்படும். இப்ப அறுபது போடு. பின்
னாடி இருபது போடு. அதுக்கப்பறம் பத்துப்பத்தா போடுன்னேன்."

"நகையா முக்கியம். பொண்ணு நல்லபடியா வந்து குடித்தனம் பண்ணி
என்னையும் எம்புள்ளையும் பிரிக்காம இருந்தா சரி."

"அந்தப் பொண்ணுக்கு கற்பனையாக்கூட இப்படி ஒரு எண்ணம்
வராது மாமி. அவ்வளவு நல்ல பொண்ணு. கல்யாணம்னா ஒருத்தருக்
கொருத்தர் உதவி செய்யறது வழக்கம்தானே. இதோ பாருங்கோ ரெண்டா
யிரத்துக்குப் புடவை எடுத்துக் கொடுத்திருக்கா.

என் புருஷன் இதெல்லாம் தப்பு, வாங்காதேங்கறார். இவா வாங்கியே
தீரணும்னு பிடிவாதம் பிடிக்கறா.

நாளைக்கு எம் புள்ளைக்குக் கல்யாணம்னா இவாதானே வந்து
சபையை நிறைக்கணும்."

அவள் பெண் வீட்டோடு மாப்பிள்ளை வீட்டுக்குப் போய் விருந்து
சாப்பிட்டு விட்டு வந்தாள். அங்கும் அவளுக்கு புடவை வைத்துக் கொடுத்
தார்கள்.

"விழுந்து நமஸ்காரம் பண்ணுடா. நீயும் பண்ணும்மா."

"குமுதவல்லி, நீ நன்னா வாழறவோ. நல்ல புருஷனோட சௌக்யமா
சந்தோஷமா இருக்கறவோ. ஒன்னுக்கு ரெண்டு பெத்தவோ. உன் வாயால
அவா சௌக்யமா, சந்தோஷமா இருக்கணும்னு சொல்லு."

அந்த மாப்பிள்ளை வீடு அவளை நிற்க வைத்துப் பேசியது. கை
கூப்பியது.

மணமக்கள் விழுந்து வணங்க குபுக்கென்று குமுதவல்லியின் கண்
களில் நீர் கட்டியது. சரக்கென்று கன்னம் வழிந்தது.

ராமா.. ராமா.. ராமா.. குமுதவல்லி அரற்றினாள்.

அந்தப் பையனின் உச்சந்தலையில் கை வைத்தாள். அந்தப்
பெண்ணை எழுப்பி இறுக்கிக் கட்டிக் கொண்டாள். கன்னங்களில் முத்த
மிட்டாள்.

"பிரியத்தைக் கொட்டு. உனக்கு தொந்தரவு பண்றவாளுக்கும் பிரியத்
தைக் கொட்டு. கொஞ்சமால்லாம் கொடுக்காதே. அள்ளி அள்ளி வீசு.

ஜெயிச்சுடலாம்.” முகம் வழித்து நெட்டி முறித்தாள்.

சில கணங்கள் அந்தப் பெண்ணைத் தன் மகளாகவே உணர்ந்தாள். வயிறு குழைய காதலித்தாள்.

தன் மருமகளை எப்படியெல்லாம் கொண்டாட வேண்டும் என்று கற்பனை செய்தாள்.

காலங்கள் உருண்டன.

அமெரிக்காவில் பத்மஜா உண்டாகியிருப்பதாகத் தகவல் வந்தது.

எட்டாவது மாதம் வந்தால் போதும் என்று பத்மஜாவின் வீடு சொல்லியது.

என்ன வீடு இது.. என்ன மனிதர்கள் இவர்கள்.. குமுதவல்லி அலுத்துக் கொண்டாள்.




“சங்கரராமன் இருக்காரா”... ஒரு நாள பதமஜாவின் தாய் வீட்டிலிருந்து போன் வந்தது.

“இல்லயே. அவர் வர மணி ஆறாகுமே. வந்து ஏழு மணிக்கு அயோத்தியா மண்டபம் போயிடுவார். அப்புறம் ஒம்பது மணிக்குத்தான் வருவார். என்ன விஷயம்.”

“அப்படியா. நான் அவர்கிட்ட சொல்லிக்கறேன்.”

உலகத்தில் மரியாதை தெரியாத மனிதர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அதில் இவளும் ஒருத்தி என்று குமுதவல்லி நினைத்துக் கொண்டார். சரி என்று போன் துண்டித்தாள்.

அம்மாவைப் போலத்தான் பெண். பெண்ணைப் போலத்தான் அம்மா. எல்லா இடத்திலும் நீக்கமற ஒரு திருட்டுத்தனம் இருக்கிறது. தேவையற்ற தந்திரம் இருக்கிறது.

குமுதவல்லி என்ன என்று கேட்காமல் விலகினாள். சங்கரராமன் வந்ததும் போன் வந்ததைச் சொன்னாள். சங்கரராமன் சரியென்று சொல்லிவிட்டு கோவிலுக்குப் போனான்.

பத்தரை மணிக்கு வீடு திரும்பினான்.

“அம்மாடி வா இங்க” கூப்பிட்டார்.

“என்ன” குமுதவல்லி அருகே வந்தாள்.

“இவா எதோ தாம்பரம் வீட்டை இடிச்சு பெரிசா கட்டிண்டு இருக்காளாம். காண்ட்ராக்டர் கிட்ட விடாத தானே செய்திண்டு இருக்காளாம்.”

“அதனால பொண்ணு பிள்ளைப் பேறை அங்க வச்சுக்க முடியாதாம். அமெரிக்கா போறது கஷ்டமாம். இங்கே வச்சுக்கலாமான்னு கேட்கறா. உன்னால உதவி செய்ய முடியுமா. காசு பணம் பத்தி கவலைப்பட வேண்டாம்கறா.”

“செய்தா ரொம்ப நன்னாயிருக்கும்னு கண் கலங்க கெஞ்சறா. எங்களுக்கு மனுஷா இல்லையேன்னு அழறா.”



“வெளி நாட்டுல இருக்கறவா நாலுபேர் சேர்ந்து காசு போட்டு இவா வீட்டைக் கல்யாண மண்டபமா மாத்தறாளாம். மூணு மாடிக் கட்டிடமாம். கீழ் போர்ஷன் கல்யாணம். முதல் மாடில சாப்பாடு. ரெண்டாம் மாடில டான்ஸ் ஹால். மூணாவது மாடில இவாளுக்கு ஒரு போர்ஷனாம். இவங்களுக்காக நாலு பெட் ரூம் போர்ஷன்.

எதுக்கு நாலு பெட் ரூமுன்னா. அமெரிக்காவில இருந்து யார் வந்தாலும் தங்கிக்கலாம். ரெண்டு பெட் ரூம் எப்பவும் காலியா இருக்கும். வாடகைய நாலா பிரிச்சு நாலு பேர் பங்கு போட்டுக்கறதும்.

மொத்தமும் முடிக்கறதுக்கு ஒரு வருஷம் ஆகும். இவ்வளவு சீக்கிரம் பத்மஜா உண்டாவான்னு இவா நினைக்கலயாம். பத்மஜால நாம கூப்பிட்டுக்கலாம். நான் உன்னைக் கேட்டுண்டு சொல்றேன்னு சொல்லிட்டேன். சரின்னு சொல்லிரட்டுமா.”

“முடியாதுன்னு சொல்வோம்.”

“ஏன் குமுதவல்லி.”

“குத்துக்கல்லு மாதிரி ஒரு பொம்மனாட்டி இங்க இருக்கேன். உங்ககிட்ட கோவில்ல தனியா என்ன பேச்சு. எங்கிட்ட கேட்காத உங்ககிட்ட கேட்டா காரியம் நடந்துரும்னு எண்ணமா. திமிருதானே இது.”

“தயவு செய்து அப்படி சொல்லாத குமுதவல்லி.”

“தயவு செய்து இதுல நீங்க தலையிடாதீங்கோ. கோவில்ல பார்த்து பேசினதாலே அழுது பேசினா. இந்த வீட்டுல தனியா பேசிருந்தா அழுத்துப் போட்டு பேசிருப்பா.”

“குமுதவல்லி இது தப்பு.”

“அந்த குடும்பமே தப்புன்னா. டார்ட்டி மைண்ட். இந்த ஊரல இருக்கற எந்த பொம்மனாட்டிகிட்டயாவது கேட்டுப் பாருங்க. என் சம்மந்தியம்மா இப்படி பண்ணினாங்கன்னு. வழிச்சுண்டு சிரிப்பா. கூசாம கெட்ட பொம்பளன்னு சொல்லிடுவா.”

“என்னம்மா.. ஆம்பள பொம்பள வித்தியாசம்லாம் பார்த்துண்டு.”

“ஏன் எனக்கென்ன மீசையா முளைச்சுருக்கு. இல்ல நீங்கென்ன புள்ள பெத்துப்பேளா. நீங்களா பிரசவம் பார்த்துப்பேள். நீங்களா இடுப்புத் துணி கட்டிவிடப் போறேள். நீங்களா தொடச்சு கை அலம்பப் போறேள். நீங்கள் இண்டலக்சுவல். மகா அறிவாளி. ஞானி. ஆனா உங்களுக்கு இதெல்லாம் தெரியாது. பொம்மனாட்டி மனசு புரியாது. இதென்ன சத்திரமா. கண்டவ வந்து புள்ள பெத்துக்கறதுக்கு. என்னால முடியாது. நான் செய்ய மாட்டேன்.”

“அவன் என் தம்பி குமுதவல்லி.”

“எனக்கு விட்டுப் போயிடுத்துன்னா.”

“நாண நன்னயஞ் செய்து விடல், அப்படின்னு ஒரு விஷயம் உண்டு.”

“ஸாரி. நான் சாதாரண மனுஷி.”

“இல்ல. நீ என் பொண்டாட்டி. சங்கர்ராமன் 'மனைவி.'”

“தயவு செய்து வற்புறுத்தாதீங்க.”

“நான் வற்புறுத்தல. கெஞ்சி கேட்டுக்கறேன். ஐ ரிக்வெஸ்ட் யூ.”

“பகவானே என்னை ஏன் இப்படி சோதிக்கற.” குமுதவல்லி கை கூப்பிக் கத்தினாள்.

அவர் எழுந்து அவளை அணைத்துக் கொண்டார்.

“விருப்பு வெறுப்பு அற்று இரு குமுதவல்லி.”

“என்னால அப்படி முடியாதுன்னா”

“முடியும். முடியணும். அப்புறம் எப்படி சங்கர்ராமன் பொண்டாட்டியா இருக்கறது.”

"இது சித்திரவதைன்னா."
"இல்லை. இது அன்பு வழி. ஆரோக்ய நிலை. தானற்றுப் போதல்.
தர்மம்."
"இல்லை. எனக்கு இதெல்லாம் தெரியாது. எனக்குத் தெரிஞ்சது என்
புருஷன். என் புருஷன் சொல்றான். செய்றேன் வரச் சொல்லுங்கோ."
"குமுதவல்லி.. வேண்டாம். மேற்கொண்டு பேச வேண்டாம்."
"தயவு செய்து இனிமே ரிக்வெஸ்ட்டுனு பேசாதீங்க. ஆர்டர் பண்
ணுங்கோ. இந்த குமுதவல்லிக்கு அதுதான் பிடிக்கும். அதுதான் அழகு. ஒரு
சின்ன ரிக்வெஸ்ட்."
"என்ன குமுதவல்லி."
"கொஞ்சம் நேரம் உங்க மடியில படுத்துக்கட்டுமா."
"சீ... நாயே. வா."
அவர் வயிற்றில் முகம் பதித்து படுத்தவளின் முதுகெல்லாம் தடவி
விட்டார். தலையைக் கோதி விட்டார். விரல்களால் காது அலைந்தார்.
கன்னம் அழுத்தி, உதடு தடவி கொஞ்சினார்.
மணி முடியும் செங்கோலும் தனித்த அரசிக்கு காலின் கீழ் உள்ள
பூமி தெரியாது. குனிந்து பார்க்கவும் தோன்றாது.
புருஷனால் அரசியாக்கப்பட்ட மனைவிக்கு, கொண்டாடப்பட்ட
துணைவிக்கு, வீட்டின் எந்த துக்கமும் துக்கமாய் தெரியாது. எவர் செய்யும்
இம்சையும் பெரிதாய் தோன்றாது.
புருஷனால் போற்றப் படாததாலேயே இந்த தேசத்தில் நிறைய பெண்
கள் மனம் பேதலித்துக் கிடக்கிறார்கள்.
அந்த பத்மஜாவின் `வீடு சங்கரராமன் சம்மதம் தெரிவித்த பிறகு
கூட மரியாதைக்காய் அவனிடம் வந்து கேட்கவில்லை.
"கிழக்குத் தாம்பரம் ஒரு காடு மாதிரி. பார்த்துண்டிருக்கும் போதே
திருடு போறது. போன வாரம் மட்டும் ஆறு மூட்டை சிமெண்ட் காணாமப்
போயிடுத்து. வாட்ச்மேன் போட்டிருக்கோம். அவனுக்கும் நான்தான் காவல்.
அந்த கடன்காரன் நன்னா கட்டில் போட்டுத் தூங்கறான்."
"ஒரு போன் செய்ய முடியாதாமா."
"அது மரியாதையா இருக்காதேன்னு நினைச்சேன்." மூன்றாம் மனி
தர் மூலமாய் சமாதானங்கள் வந்தன. .
பத்மஜா பம்பாய் வந்து இறங்கினாள். அங்கிருந்து அப்படியே
சென்னை விமான நிலையம் வந்து தாம்பரத்திற்குப் போனாள்.
"அடடா. ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்கு, ஊரை மதிச்சவுடனே
அம்மா ஞாபகந்தான் வரும். அதுனாலதான் தாம்பரம் போயிருக்கா."
"அதெல்லாம் ஒன்னுமில்ல. அறுபத்திரண்டு இன்ச்சு டி.வி கொண்டு
வந்திருக்கா. லேசர் டிஸ்க் வீடியோ கொண்டு வந்திருக்கா. புரொஜக்டர்
கொண்டு வந்திருக்கா.
ரெண்டாவது மாடிய டான்ஸ் ரூம்னு வச்சுருந்தால்ல. அது சினிமா
ரூமாக்கப் போறாளாம். லேசர் டிஸ்க் வீடியோவில புரொஜக்டர்ல போட்டு
விட்டு வெள்ளை சுவத்தை ஸ்க்ரீனா வச்சு சினிமா காட்டப் போறாளாம்.
அசல் சினிமா போலவே இருக்குமாம்.
இதுக்கு தனி சார்ஜாம். கரெண்ட் பில், டிஸ்க் வாடகை எல்லாம்
தனியாம்.
சென்ட் பாட்டில் மட்டும் பன்னெண்டு கொண்டு வந்திருக்காளாம்.
கத்தை கத்தையா காசு கொண்டு வந்து வரி கட்டினா.



வீட்டுக்கு வந்தா, பாவாடையச் சுத்தி எட்டுப்பிடி தங்கச் சங்கிலி
ஏகப்பட்டது வச்சுருக்கா.
கூலிங் கிளாஸ், டி ஷர்ட், ஜீன்ஸ் பேண்ட், மேக்கப் சாமான், எமர்
ஜென்சி லைட். என்னால ட்ராலி தள்ளவே முடியல. ஆறு பெட்டி அத்
தனையும் கனம். பத்மஜாவின் உறவு பொருமிற்று. பத்மஜா மூன்று நாள்
பொறுத்து மேறகு மாம்பலம் வந்தாள். ஒரு சாக்லேட் டப்பா, இரண்டு டி
ஷர்ட் குழந்தைகளுக்காகவும், ஒரு ஜீன்ஸ் பேண்ட் சங்கரராமனுக்காகவும்
ஒரு பாடி ஸ்ப்ரே குமுதவல்லிக்காகவும் கொண்டு வந்து நீட்டினாள்.
குழந்தைகளின் முகத்தில் ஏமாற்றங்கள் தெரிந்தது.
"சங்கர்ராமன் மாடி ரூமை ஏ.சி. பண்ணலாமா. ஏ.சி. வாடகைக்கு
கிடைக்குமா. சார்ஜைப் பத்தி கவலைப்படாதே."
நைட்டியின் நாலு பட்டன்களையும் அவிழ்த்துக் கொண்டு இடுப்பில
கைவைத்து பத்மஜா மூச்சிறைக்கப் பேசினாள்.
சங்கரராமன் என்னதான் ஞானியாக இருந்தாலும் ஒரு ஆண் எதிரே
ஒரு பெண் எப்படி நெஞ்சு திறந்து நிற்க முடியும்.. பெண்ணுக்கு கூச்சம்
வேண்டாமா. குமுதவல்லி உற்றுப் பார்த்தும் பத்மஜா புரிந்து கொள்ள
வில்லை.
ஏ.சி. பொருத்தப்பட்டது. குழந்தைகள் அங்கே படுத்துக் கொள்ள
விரும்பியபோது பத்மஜா மறுத்து விட்டாள். 'நான் கொஞ்சம் தனியா
இருக்கணும். பசங்க இருந்தா தொந்தரவு' என்று மறுத்து விட்டாள்.
அதேசமயம் பையன்களை அதைக் கொண்டு வா, இதைக் கொண்டு
வா என்று ஏவினாள்.
"அம்மாவை ஓமப்பொடி பண்ணித் தரச் சொல்லுடா, அடை அவி
யல் எந்த ஓட்டல்ல நன்னாயிருக்கும். நீ பள்ளிக்கூடம் விட்டு வர்றபோது
ஒரு அடை அவியல் பார்சல் வாங்கிட்டு வர்றயா எனக்கு."
பன்னிரண்டு வயதுப் பையனை விட்டுவிட்டு அவனுக்கு ஒரு வின்
ள்ல் கொடுக்காமல் ஒரு மனுஷியால் எப்படி சாப்பிட முடியும். சாப்பிட்ட
இலையைக் கூட எடுக்காமல் கையை துண்டால் துடைத்துவிட்டு எப்படி
அப்படியே தூங்க முடியும்.
இந்த பெண்ணிடம் எங்கோ ஒரு மன அழுக்கு, மிக கேவலமான
அனாச்சாரம், கடுமையான சோம்பேறித்தனம் இருக்கிறது.
பத்மஜா டாக்டரிடம் செக்கப்பிற்குப் போனாள். அங்கே சாப்பிட்ட
மருந்துகளைக் காட்டினாள்.
'நீங்க என்ன மருந்து சொன்னாலும் அமெரிக்கால ஒரே நாள்ல வந்
திரும் டாக்டர்.' அதிகமாய் அலட்டிக் கொண்டாள்.
'புள்ளப்பெற மருந்து எதுக்கு. ஒரு பொண்ணு, அவ வயித்துல குழந்த
போறுமே. புள்ள தானா பொறந்துருமே. எனக்கு அமெரிக்கா பிடிக்கா
தும்மா. ரொம்ப அதைப் பத்தி பேசாதே.' அந்த பெண் டாக்டர் சட
டென்று பேச்சறுத்தாள். பத்மஜா வழியெல்லாம் அந்த டாக்டரை திட்டிக்
கொண்டு வந்தாள். வேற டாக்டரிடம் போக வேண்டும் என்று வற்புறுத்தி
னாள்.
கர்ப்பிணி நடந்தே ஆகவேண்டும் என்று எல்லோரும் சொன்
போதும் இடதும் வலதும் ஹாலின் குறுக்கே நடந்தாள். குழந்தைகளை
வாசலுக்குப் போய் படி என்றாள்.
பெரியவன் அவளைக் கண்டு மிரண்டான். 'எப்பம்மா இவ
அமெரிக்கா போவாங்க?' ரகசியமாய் கேட்டான்.
"எங்கிட்ட கேட்டதோட நிறுத்திக்கோ. வெளில யார்கிட்டயும்
மாதிரி பேசிறாதே."

“சீ சீ... நான் பேசலை. என்ன நடக்குதுன்னு நான் பார்த்திண்டு தானமா இருக்கேன். இப்ப பிளஸ் ஒன் பரவாயில்லை. தம்பி செவன்த் அதுவும் பிரச்னையில்லை. அடுத்த வருஷமும் இவங்க இங்க இருந்தாங்கனா என் பிளஸ் டூ கழிச்சுக்கும்.”

“புள்ளப் பெத்தவுடனே ஓடிப்போயிடுவாடா. அவளால இங்க இருக்க முடியாது.”

“நான் கொடுத்தேனே டி ஷர்ட் அதைப் போட்டுக்கலயான்னு கேட்டா. எனக்கு இவங்க மேல ரொம்பக் கடுப்பு. எனக்கு டி ஷர்ட் பிடிக்காதுன்னு சொன்னேன். அப்ப திருப்பிக் கொடுத்திரு, அப்படின்னு சொல்றாங்கமா. என்னமா செய்யட்டும்.

“மறுபடியும் இந்த பேச்சு வந்தா இதையே சொல். கேட்டா திருப்பிக் கொடுத்துடுவோம்.”

ஆனால் மறுமுறை அவர்கள் இருவருக்கும் சண்டை வந்துவிட்டது.

“பதினாறு வயசாகறது என்னா உனக்கு மரியாதையே தெரியல. இதுதான் விருந்தாளிய நடத்தற முறையா.”

“நீங்க ஒன்னும் இந்த வீட்டு விருந்தாளி இல்ல. உங்களுக்காக ஒவ்வொரு தடவையும் கீழயும் மேலயும் போயிட்டு வரமுடியாது. பத்து நிமிஷத்துல மூணு தடவை நான் கீழ போயிட்டு வந்துட்டேன். சும்மா வெறுப்பேத்திறேனே.”

அன்று மாலை அவள் அம்மா பார்க்க வந்தபோது அவள் குறை சொல்லி ஓவென்று அழ வீடு மௌனமாய் கேட்டுக் கொண்டது.

“அம்மா இந்த மாமி பைத்தியம்மா. நான் மாமா வீட்டுக்குப் போய் படிக்கறேன். அங்க இருந்தே ஸ்கூலுக்குப் போறேன்” மூத்தவன் வெளியேறி விட்டான்.

சங்கரராமன் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தான்.

“சரி எல்லாம் நல்லதுக்குத்தான்” தலைநிமிர்த்திச் சொன்னான்.

குமுதவல்லி மனதைக் கல்லாக்கிக் கொண்டாள்.

அப்பா இதெல்லாம் தெரிந்துதான் ஆதித்ய ஹிருதய ஸ்தோத்திரம் படிக்கச் சொன்னாரோ. அவள் தீவிரமாகப் படிக்க ஆரம்பித்தாள்.

நல்ல நாளில், நல்ல நட்சத்திரத்தில் நல்ல நேரத்தில் எந்த சிக்கலும் இன்றி பெண் குழந்தை பிறந்தது.

பத்மஜா பிசாசு போல் தூங்கினாள். குமுதவல்லி அழும் குழந்தையை நெஞ்சோடு அணைத்து சர்க்கரைத் தண்ணீர் கொடுத்தாள்.

ஏழாம் நாள் குழந்தையோடு வீட்டிற்கு வந்தாள். வீடு வருவோர் போவோராய் நிறைந்து காணப்பட்டது. குமுதவல்லிக்கு வேலை நெக்கு வாங்கியது.

குழந்தையை தொட்டிலிட்ட இரவு அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதரகத்தின் மூலம் இடி போன்ற அந்த செய்தி வந்தது.

வேதமூர்த்தி, இன்னும் இருவர் பயணம் செய்த அந்தக் கார் விபத்திற்குள்ளாகியது. பயணம் செய்த மூவர் நிலைமையும் கவலைக்கிடம்.

சங்கரராமன் திகைத்தான். அமெரிக்காவிலுள்ள மற்ற உறவினர்களை அவசரமாக தொடர்பு செய்தான். தாம்பரத்திற்குப் போன் செய்து உடனே வரச் சொன்னான்.

“ஒன்னும் ஆயிருக்காது. ஒன்னும் ஆயிருக்காது. ஒருவரை ஒருவர் சமாதானம் செய்து கொண்டார்கள். பத்மஜா அமெரிக்காவிலுள்ள தன் அக்கம் பக்கத்து வீடுகளுக்கு போன் தொடர்பு கொள்ள முயற்சித்தாள். யாருக்கும் சரியாக விஷயம் தெரியவில்லை. தெரிந்து கொண்டு போன் செய்வதாக துண்டித்தார்கள்.



அடுத்த இடி ஆறு மணி நேரத்தில் மறுபடியும் வீட்டில் இறங்கியது.

“வேதமூர்த்தி மரணமடைந்தார். அவரது உடல் சென்னைக்கு அனுப்பி வைக்கப்படும்.”

வேதமூர்த்தி தன் இந்திய நண்பரோடு கம்பெனிக் காரில், கம்பெனி விஷயமாய் வெளியில் போய்க் கொண்டிருக்கும்போது இந்த விபத்து நடந்தது. அந்த இந்திய நண்பரின் மனைவியும் உயிர் துறந்தார். இந்திய நண்பர் பிழைத்துக் கொண்டார். ஆயினும் உடல் தேற சில மாதங்கள் ஆகும்.

பற்பசைக் கம்பெனி வேதமூர்த்தியின் மனைவிக்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது. வேதமூர்த்தியின் ஆத்மா சாந்தி அடைய தாக.

சங்கரராமன் என்கிற ஞானி அறிவாளி ஆன்மீகவாதி கைவிரித்து வானம் பார்த்துக் கதறினான். நெஞ்சில் அறைந்து கொண்டு அழுதான். அவன் துக்கத்தை யாராலும் குறைக்க முடியவில்லை.

பத்மஜா பலமுறை மயக்கம் போட்டு விழுந்தாள். மனம் பேதலித்து உளறினாள். எல்லாத் திக்கிலிருந்தும் எல்லா உறவுகளும் ஓடி வந்தன. ஐயோ இப்படி ஆயுடுத்தே என்று கதறின. மண்ணைப் போட்டுட்டயேடி என்று அலறின.

அந்த முழுங்கை நீள பெண் சிசுவை, பிஞ்சு உயிரை குமுதவல்லி சமையலறைக்கு எடுத்துக் கொண்டு போய் துணிப் பொதிகளுக்கு நடுவே வைத்து அடைகாத்தாள்.

இந்த விஷயம் இந்த குழந்தை தலையில் வந்து விழப்போகிறதே என்று கவலைப்பட்டாள். பத்மஜா குழந்தைக்குப் பால்தர மறுத்துவிட்டாள்.

“சாகட்டும் அந்த பீடை” பத்மஜாவின் அம்மா கரித்துக் கொட்டினாள்.

அமெரிக்கா மிக முன்னேறிய தேசம். சவப்பெட்டி பளபளப்பாய், மிக அழகாய் இருந்தது. கோட்டும் டையும் போட்டு வேதமூர்த்தி உள்ளே தூங்குவது போல் இருந்தான்.

நான்கு நாள் கழித்து சவப்பெட்டி வந்ததும் வீடு மறுபடியும் ரணமாயிற்று. நெஞ்சு வெடிக்க எல்லோரும் அழுதார்கள்.

தர்மபுத்திரா, தர்மபுத்திரா குந்தியின் மைந்தனே, எதிர்க்கரையிலிருந்த யட்சன் உரத்த குரலில் விளித்தான்.

உலகிலேயே மிக நகைச்சுவையான விஷயம் எது.

கிழவர்கள் இறந்ததைப் பார்த்த பிறகும், இளைஞர்கள் இறந்ததைப் பார்த்த பிறகும், அழகிகள் இறந்ததைப் பார்த்த பிறகும், அகோரர்கள் இறந்ததைப் பார்த்த பிறகும், செல்வர் இறந்ததைப் பார்த்த பிறகும், வறியவர் இறந்ததைப் பார்த்த பிறகும், வீரர்கள் இறந்ததைப் பார்த்த பிறகும், கோழைகள் இறந்ததைப் பார்த்த பிறகும், பாமரர்கள் இறந்ததைப் பார்த்த பிறகும், பண்டிதர்கள் இறந்ததைப் பார்த்த பிறகும் எவர் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் எதன் பொருட்டாவது ஏதோ ஒருவிதமாய் இறப்பதைப் பார்த்த பிறகும் தான் நிச்சயம் தொடர்ந்து வாழ்வேன் என்று ஒவ்வொரு மனிதனும் நினைத்துக் கொள்கிறானே இதுதான் உலகிலேயே மிகப் பெரிய நகைச்சுவை. சிரிப்பை சிரிப்பாக்கும் விஷயம்.

தர்மர் பணிவோடு உரைத்தார்.

சங்கரராமன் அழுகைக்கு நடுவே வாய்விட்டுச் சிரித்தான்.

மேற்கு மாம்பலம் மொத்தமும் சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டது.

ஐயோ, குமுதவல்லி கோவிலில் பார்த்த பெண்ணின் அம்மா ஓடி வந்து கட்டிக் கொண்டாள்.

“நாங்க ரொம்ப பாவம் பண்ணிருக்கோம் மாமி. எங்களுக்கு

சந்தோஷமே கூடாதுன்னு பகவான் சொல்லிருக்கறார். தலை நிமிரவே கூடாதுன்னு ஓங்கி ஓங்கி அடிக்கறார்.”

குமுதவல்லி குமுறிக் குமுறி அழுதாள்.

“இதோ பாருங்க மாமி. இந்த பாவி மடில இன்னொரு பாவி படுத்திருக்கு” கைக்குழந்தையைக் காட்டினாள்.

“வேண்டாண்டி குமுதவல்லி. உன் வாயால அப்படி சொல்லாத. மத்த லௌகீகமான மனுஷா அப்படி பேசலாம். நீ தேவதை. அப்படி பேசலாமா. எல்லாம் தெரிஞ்சவருடைய மனைவி. இந்த வார்த்தை சொல்லலாமா. சங்கர ராமன் ஞானி. நீ அப்பட பேசக்கூடாது.”

“அவரும் அழறார் மாமி. எனக்கு அதுதான் தாங்க முடியலை. இதை விட்டுட்டு அவர் பக்கத்துலபோய் சமாதானப்படுத்த முடியலை.”

“உன் சமாதானம் ஒண்ணும் தேவையில்லை” அருகே உட்கார்ந்திருந்த அப்பா சள்ளென்று சீறி விழுந்தார்.

“சங்கர்ராமன் அழலைன்னா மத்தவா ஆத்திரப்படுவா. அவா அழுது மத்தவாளை அழப் பண்ணி கனங் குறைச்சுண்டிருக்கான். ஞானி அழுதாலும், ஞானிதான். எல்லாரும் அழுதாத்தான் துக்கம் கழியும். இல்லன்னா சண்டை வந்திடும்.”

தகனம் முடிந்து, மறுநாள் பாலில் சமணப்படுத்துதல் முடிந்து, மற்ற சடங்குகள் தொடர்ந்தன.

பதிமூன்றாம் நாள் வீடு புனிதமாயிற்று.

விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்ட ஒரு இலங்கைத் தமிழன் நொறுங்கிய காரையும், ஆஸ்பத்திரியில் மயக்க நிலையில் இருந்த வேதமூர்த்தியின் நிலையையும் வீடியோ படம் பிடித்து கொண்டு வந்திருந்தார்.

பிழைத்துக் கொண்ட அந்த இன்னொரு தமிழர் வீடியோ டேப்பின் கடைசியில் பேசினார்.

“பத்மஜாமா – ஐ ஆம் ஸோ ஸாரி” விக்கி விக்கி அழுதார்.

அவர் உடம்பு முழுவதும் கட்டுப் போட்டிருந்தது.

“என் மனைவி ரமா செத்துப் போயிட்டாம்மா. நான் அவளுக்கு கொள்ளி கூட வைக்கலை. யாரோ ஒரு அமெரிக்கன் கொள்ளி வச்சிருக்கான். இடுப்புக்குக் கீழ ஒன்னுமே இல்லைன்றாங்க. வேதமூர்த்திக்கு பின் மண்டையில அடி. மூணு செகண்டுல உயிர் போயிருக்கணுங்கறாங்க.

நான்தான் வண்டி ஓட்டினேன். எதிர்ல வந்த ஆயில் டேங்கர் கண்ட்ரோல் இழந்து என் வண்டிமேல மோதிருச்சு. பத்து செகண்டுல எல்லாம் முடிஞ்சு போச்சு.

வேதமூர்த்தி உன்னப் பத்திதாம்மா பேசிட்டு வந்தான். இந்தியா போகணும், இந்தியா போகணும்ன்னு சொல்லிண்டு இருந்தான். ரமாவும், வேதமூர்த்தியும் அடுத்த வாரமா இந்தியா போகலாம்னு பேசிண்டிருந்தாங்க. அவா கதி இப்படி ஆயிடுச்சு.

ரமாவுக்கு மைலாப்பூர் கபாலி கோவில் குளம் ரொம்பப் பிடிக்கும். அதுல விழுந்து ஒரு தடவை சாகறதுக்கு இருந்தாளாம். காப்பாத்திட்டாங்களாம். அதைப் பார்க்கறபோதெல்லாம் ரமாவுக்கு தன்னோட சாவு ஞாபகத்துக்கு வருமாம்.

பத்மஜா யாரையாவது உங்களுக்குத் தெரிஞ்சவங்களை விட்டு ரமாவுக்கு ஈமச்சடங்கு செய்ய முடியுமா. என்ன செய்யணும்ம்னு எனக்கு தெரியலை பத்மஜா. ஆனா செய்யணும். நான் மன்றாடிக் கேட்கிறேன்.” அந்த மனிதர் கைகூப்ப முடியாமல் கைகூப்பினார். கை கூப்பும்போதே விக்கி விக்கி அழுதார். கேமரா துக்கம் தாங்காமல் அலைந்தது.

“ப்ளீஸ் ஹெல்ப் மீ. தயவுசெய்து ரமாவுக்கு ஈமக் கடன்கள் செய்யுங்கள். என் மனைவியின் ஆத்மா சாந்தியடையச் செய்யுங்கள். எல்லாம் வல்ல இறைவன் பெயரால் மன்றாடிக் கேட்கிறேன். இந்த அநாதைக்கு உதவுங்கள்.”



அமெரிக்கா என்ன அமெரிக்கா. இந்தியா வேர். ஒவ்வொரு இந்திய மனதிலும் ஆழ்ந்து பரவியிருக்கிறது. மிகுந்த சந்தோஷத்தின் போதும் மிகுந்த துக்கத்தின் போதும், இது வெளி வருகிறது.

தேசம் என்பதும் கலாச்சாரம் என்பதும் மனிதனின் முகங்கள். எல்லா மனிதருக்கும் முகம் உண்டு. முகமில்லாதவர்கள் மனிதர்கள் இல்லை.

மறுநாள் குமுதவல்லியோடு மைலாப்பூர் குளக்கரைக்குப் போய் சங்கர ராமன் பிண்டத் தர்ப்பணம் செய்தார்.

சோற்று உருண்டைகளை உருட்டி வைத்து ரமாவின் இறந்து போன முன்னோர்களை அழைத்து அவளை ஆசுவாசப்படுத்தச் சொன்னார்.

காக்கைகளும், நாய்களும் அந்த சோற்று உருண்டைகளை உண்டன. ஒரு பருந்து பாய்ந்து கீழிறங்கி ஒரு உருண்டையை வாரிக் கொண்டு போயிற்று. இவை அனைத்தும் வீடியோப் படமாக்கப்பட்டன.

ரமாவின் கணவர் இருக்கும் ஆஸ்பத்திரிக்கு இது அனுப்பப்பட்டது.

நாட்கள் உருண்டோடின. பத்மஜா குழந்தையோடு தாம்பரம் போனாள்.

“சங்கர்ராமன் எனக்கு ஒன்னு புரிகிறது. இந்த உலகத்துல எதுவும் நிரந்தரமில்லை. எல்லாம் டெம்பரரி. அதனால எதையும் சீரியசா எடுத்துக்காத. நாம சாகற வரைக்கும் சந்தோஷமா இருந்துட்டுப் போறது தான் நல்லது.

குமுதவல்லிகிட்ட மன்னிப்புக் கேட்கக்கூட எனக்கு வெட்கமா இருக்கு.

நான் அப்ப முட்டாளாயிருந்தேன். அதுனால அலட்டிண்டேன். இப்ப கொஞ்சம் புத்தி வந்திருக்கு.

உங்க தம்பி செத்த பிறகு இங்க உட்கார்ந்து யாரை அதிகாரம் பண்றது. என்னன்னு பண்றது. சௌகர்யமோ, அசௌகர்யமோ நான் எங்க அம்மா வீட்டுல இருக்கறதுதான் சரி.

கிழக்குத் தாம்பரம் காடுதான். அங்கேயும் வீடெல்லாம் வர ஆரம்பிச்சுருச்சு. டாக்டர்ஸ் ரெண்டு பேர் இருக்கா. அது போதும். அவசியமானா இங்க வர்றேன் உதவி கேட்டு. நான் போகும்போது சொல்லிக்கலாமா கூடாதா தெரியலை. எனக்காக ப்ளீஸ் பிரார்த்தனை பண்ணுங்கோ.

எங்கயோ செத்துப்போன, உங்களுக்குத் தெரியவே தெரியாத ரமாங்கற முதலியார் பொண்ணுக்காக நீங்க பிரார்த்தனை பண்ணலையா. எனக்காகவும் பிரார்த்தனை பண்ணுங்கோ.

ஸார். நீங்க ஞானி. உங்க மனைவி உங்களை விட பெரிய ஞானி. உங்களுக்காக என்னைப் பொறுத்திண்டா ஸார், அந்த அம்மா.

தன் குழந்தை தாத்தா வீட்டுக்குப் போனதும் என்னை ஒரு வார்த்தை சொல்லல ஸார். எப்ப அமெரிக்காவுக்கு ஒழியப் போறன்னு கேட்கவே இல்லை ஸார். கடவுளாப் பார்த்து உடச்சுட்டார். என் கர்வத்தை சுக்கு சுக்கா உடச்சுட்டார்.

வாழ்க்கை ஆறு. காட்டாறு. என்னை எங்கயோ அழச்சுண்டு போறது.”

அவள் குழந்தையோடு கார் ஏறினாள். மறைந்தாள்.

வீடு எதையோ இழந்தது போல் தோற்றமளித்தது.

சங்கும் பாலாடையும் ரப்பர் பெட்ஷீட்டும் நாப்கினும் [illegible]யும் குழந்தை வாசனையும் குமுதவல்லியை பைத்தியமாக்கின.

“ஏன்னா. இவ பால் கொடுப்பாளா. இல்ல கழுத்தை நெரிச்சு கொன்னுடுவாளா. சிமெண்டும் மணலும் இருக்கற வீட்டுக்கு குழந்தை எடுத்துட்டு போவாளா. ஈர சுவருக்கு நடுவுல குழந்தை படுத்தா ஜன்னி வந்துடுமே

ஏன்னா குழந்தையக் கேட்கலாமா. கேட்டா கொடுப்பாளா. அது
உங்க தம்பி குழந்தைதானே. கேட்டா என்ன தப்பு. பத்மஜாவுக்கு வளர்க்கத்
தெரியாதுன்னா. இன்னுங்கூட பால் கொடுக்கவே தெரியாது.
நான் சர்வமா பேசறேனா. நான் கேக்கறது தப்பா. ஒரு மாசமா
அதைத் தூக்கித்தூக்கி கொஞ்சிட்டு இன்றைக்கு அது இல்லேங்கவும் மனசு
தவிக்கறது.
எனக்குப் பொன் குழந்தைன்னா ரொம்ப ஆசை. உங்களுக்கும்
ஆசைதானே.
முதமுதல்ல அதை நர்ஸ்கிட்ட இருந்து நான்தான் வாங்கினேன்.
நான்தான் சர்க்கரைத் தண்ணீர் கொடுத்தேன். நான்தான் நெஞ்சல வச்சு
ஜோஜோன்னு கொஞ்சினேன்.
பெத்தவ இருக்கும்போது நாம குழந்தையைக் கேட்கறது தப்பில்லை
...மகா தப்புதான். வாரத்துக்கு ஒரு தடவை போய்ப் பார்க்கலாம். கொச
கொசன்னு பேச்சு முத்தி எதாவது சண்டை வந்திடும்.
என் நிலைல நீங்க இருந்தா என்ன செய்வேள். நீங்க தான் ஞானி
யாச்சே சொல்லுங்க பார்ப்பம்."
அவள் புருஷனைக் கேட்டாள். பதிலுக்குக் காத்திருந்தாள்.
"உலகிலுள்ள எல்லா குழந்தைகளும் நம் குழந்தைகளே. ஒரு புள்ளியில்
தோன்றிய நாதம் எல்லா திசையிலும் சமமாய் விரிவடைவது போல ஒரு
குழந்தையின் மீது தோன்றிய அன்பு உலகில் எல்லா உயிர்கள் மீது
விரிவடைய வேண்டும். எல்லோரையும் நேசிக்கத் தெரிய வேண்டும். எதை
யும் எதிர்பார்க்காமல் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்" சங்கர்ராமன்
பேசினார்.
"அடடா. புரியுது. இத்தனை பேசற நீங்க இவ்வளவு தெளிவிருக்கற
மனுஷன் தம்பி செத்துப்போனதுக்கு ஏன் அப்படி அழுதேள். கதறு
கத்றுன்னு கதறினேள்."
"அழுகை வந்தது அழுதேன்."
"இதுதான் பதிலா."
"அழுகை வராம அழல."
"புரியலையே."
"கொய்யா மரத்துல ஏன் கொய்யாப்பழம் காய்க்கறது.'
"அது அதன் இயல்பு."
"இதுவும் அதுவே."
"அழுகை இயல்பா."
"நான் என்னை ஞானின்னோ, வீரன்னோ, அறிவாளின்னோ நினைச்
சுக்கறதே இல்ல. நீங்க சொல்ற பாராட்டைக் காதுல போட்டுக்கறதும்
இல்லை. நான் சங்கர்ராமன். ஒரு கம்பெனில சாதாரண குமாஸ்தா. குமுத
வல்லியின் புருஷன். ரெண்டு குழந்தைகளின் தகப்பன். சின்ன சம்சாரி.
அரசுக்குண்டானதை அரசுக்கும், கடவுளுக்குண்டானதை கடவுளுக்
கும் கொடுப்பவன். எனக்கு அழுகை வந்தது அழுதேன்."
"எனக்கு இப்ப புரிகிறது. சாதாரணமா இருங்கறேள். அலட்டாதேங்
கறேள்."
சங்கரராமன் சிரித்தான்.
"சரி உங்க புத்தி எனக்கேன் வரல. உங்களுக்கு இந்த புத்தி எப்படி
வந்தது. யார் கத்துக் கொடுத்தா."
"இது கற்று வருவதல்ல. உற்றுப்பார்" சங்கரராமன அமைதியாகப்
பதில் சொன்னான்.
"எதை உத்துப் பார்க்கறது.



'உன்னையே நீ உற்றுப்பார்."
குமுதவல்லி விழித்தாள்.
குமுதவல்லி என்பது எண்ணங்களின் தொகுப்பு
"நீ என்பது என்ன. குமுதவல்லி என்பது எண்ணங்களின் தொகுப்பு
உன் எண்ணங்களே நீ. எனவே உன் எண்ணங்களை உற்றுப் பார்."
"எப்படி உத்துப் பார்க்கறது."
"அமைதியாய் உட்கார்ந்து கண்மூடி உன் மனம் அலைவதைப் பார்த்
துக் கொண்டிரு."
"அப்ப என்னாகும்."
"உன் எண்ணங்கள் சுருங்கத் துவங்கும். யோசிப்பு நின்று போகும்.
அப்போது உள்மனம் வெளியேறி நிற்கும்."
"உள்மனம்னா என்ன" குமுதவல்லி வியப்போடு கேட்டாள். அவ
ளுக்கு புரிந்தது போலவும் இருந்தது. புரியாதது போலவும் இருந்தது.
"மனம், உள்மனம் இரண்டும் ஒன்றே" சங்கரராமன் பதில் சொல்
னான்.
குமுதவல்லி விழித்தாள்.
"இது குமுதவல்லி. நான் சங்கர்ராமன் என்று யோசிக்கிறேனே இது
மனம். இந்த மனம் மொழியால் யோசிக்கும். இடைவிடாது பேசும்.
மொழியற்ற நிலையும் மனதிற்கு உண்டு. ஏதேதோ உருவங்கள் வரும்.
நீர்க்கோடாய் கலைடாஸ்கோப்பாய் மொழியற்ற ஏகப்பட்ட சித்திரங்கள்
போடும். அப்போது பேசாது. இந்த இரண்டும் நிற்க வேண்டும்.
இவைகளை அவதானித்துக் கொண்டிருந்தால் இரண்டுமே சுருங்கத்
துவங்கும். உள்ளிருந்து வெளியேறி விடும்.
அவதானிப்பது என்பது பார்ப்பதல்ல. இவைகள் இருக்கின்றன என்ற
உணர்வோடு இருத்தல்.
எந்த மயக்கமும் இல்லாமல், இது என்ன என்ற கேள்வியும் இல்லா
மல் சரியா தவறா என்று பிரித்தெல்லாம் பார்க்காமல் வெறுமே அவை
களோடு இருத்தல்.
இதற்குமேல் இதைச் சொல்லித் தர முடியாது குமுதவல்லி. அப்போது
மரணம்போலும் மிகப்பெரிய அமைதி தோன்றுகிறது.
ஒருமுறை அந்த நிலையைக் கண்டு கொண்டால் மனசும் முகமும்
மாறிப் போய் விடுகின்றன. இது மனித வாழ்க்கைப் பரிணாமத்தில் மிக
உயர்ந்த நிலை. இதற்குப் பிறகு பட்டும் படாமலும், தொட்டும் தொடாமலும்
இங்கே வாழலாம். மனம் எதையும் பற்றிக் கொள்ளாது.
பற்றிக் கொள்ளும்படியாய் இங்கே எதுவும் முக்கியமில்லை. அடிக்
கடி கண்மூடி அந்த அமைதிக்கு போய்விட முடியும். போகும் வழி தெரியும்.
கண் மூடாமலும் மரணம் போன்ற அந்த பேரமைதியான நிலைக்கு
நகர்ந்து விட முடியும்.
சாப்பாடு தூக்கம் எல்லாம் தேவை. இதுவும் மலம் மூத்திரதாரியான
வாழ்க்கை.
ஆனால் எவரோடும் பகையில்லை. எது குறித்தும் கவலை இல்லை.
இந்த நிலையில் உன் பேச்சும் செயல்களும் மிக உன்னத நிலையினை
அடைகின்றன. எதிலும் ஒட்டாதபோது மிகத் தெளிவோடு பேச முடியும்.
கோபமே இல்லாதபோது எல்லா உயிர்களிடத்தும் அன்பாய் இருக்க முடி
யும்.
அன்பாய் இருக்கிறபோது இன்னும் அமைதியாய் இருக்க முடியும்.
கோபம் என்பது ஒரு கொதிப்பு. துக்கம் என்பது ஒரு அயர்ச்சி.
இதுபோன்றவைகள் இல்லாது போனால் வாழ்க்கை மிகுந்த சுகம்.

இதை சித்த புருஷர்களின் நிலை என்று கொள்ளாதே. அது வேறு
வழி. இது ஞானம்.
இது கூடுவிட்டு கூடுபாயாது. மாயாஜால வித்தை செய்யாது. ஆனால்
இந்த அமைதி எல்லா கேள்விக்கும் பதில் சொல்லும். அடுத்து என்ன
செய்ய வேண்டும் என்று இந்த கேள்விக்கு நன்கு தெரியும்.
எந்த உத்தேசமும் இல்லாததால் இந்த அமைதிக்கு நாளை என்ன
நடக்கும் என்பது தெரிந்துவிடும். தெரிந்தபிறகும் இந்த அமைதி குதிக்காது.
மெல்ல மெல்ல வளர்ந்து எப்போதுமே இந்த அமைதி உள்ளிருக்கும்
படி பார்த்துக் கொள்ளலாம். பிறகு அவரை அந்த அமைதியே இட்டுச்
செல்லும்.
இவ்வளவுதான் குமுதவல்லி. இதுதான் முதலும் கடைசியுமான விஷ
யம்.
இதற்குத்தான் மதம். இதற்குத்தான் வழிபாடு. இதற்குத்தான் பண்டிகை.
இதற்குத்தான் ஜெபதபங்கள். இதற்குத்தான் தொழுகை. இதற்குத் தான் பலி
கொடுத்தல். இதற்குத்தான் வேதப்புத்தகம்.
மரணம் போன்ற இந்த அமைதி வராது போனால் இவை அனைத்
தும் வீண். இவை அனைத்தும் பொய்.
வேறென்ன சந்தேகம் குமுதவல்லி."
குமுதவல்லி எழுந்து இடுப்பில் தலைப்பைச சொருகிக் கொண்டு
சங்கரராமனை நமஸ்கரித்தாள்.
"புருஷனே குருவாக வருவது எவ்வளவு பெரிய பாக்கியம். போகமும்
யோகமும் ஒரே இடத்தில் இருப்பது எவ்வளவு பெரிய சந்தோஷம்.
நான் நீங்கள் சொன்னது போல என்னைப் பார்க்க முயற்சிக்கிறேன்.
எப்போதும் என்னை அவதானிக்க ஆரம்பிக்கிறேன்."
மறுபடி காலம் நகர்ந்தது.
பத்மஜா அமெரிக்கா போய் வந்ததாகவும். லாரி மீது நஷ்டஈடு கேட்டு
வழக்கு தொடுத்திருப்பதாகவும் இன்ஷுரன்ஸ் கம்பெனியோடு பேசிவிட்டு
வந்ததாகவும் வேதமூர்த்தி வேலைசெய்த இடத்திற்கு போய் வந்ததாகவும்
சொன்னார்கள்.
அந்த இந்தியர் பெயர் வரதராஜுலுவாம். எழுந்து நடமாடத் துவங்கி
விட்டாராம். அவரையும் பார்த்துவிட்டு வந்திருக்கிறாள். அந்த கேசட்
போட்டு காட்டியிருக்கிறாள்.
அவர் நெகிழ்ந்து போய் வாய்விட்டு அழுதாராம்.
இந்த முறையும் ஏதேதோ வாங்கி வந்தாள். தாம்பரத்திலேயே
இறங்கினாள்.
திடீரென்று ஒருநாள் குழந்தையோடு வந்திறங்கினாள். சும்மா வந்தேன்
என்று சொன்னாள்.
குழந்தை தவழ்ந்தது. சுவர்பிடித்து நின்றது. எடுத்து மடியில் வைத்துக்
கொள்ள வாயில் கட்டை விரல் வைத்து குமுதவல்லியின் மார்போடு ஒட்டிக்
கொண்டது.
"சங்கர்ராமன், கேஸுக்காகவோ, கம்பெனி கொடுக்கற நஷ்டஈடு
வாங்கவோ நான் மறுபடியும் அமெரிக்கா போக வேண்டியிருக்கும்.
"அப்படி போக நேர்ந்தால் நான் குழந்தையை குமுதவல்லிக்கிட்ட
கொடுத்துட்டு போகட்டுமா" பத்மஜா கேட்டாள்.
"இதை நீ குமுதவல்லிக்கிட்டதான் கேட்கணும்."
"நீங்க சரின்னு சொல்லுங்கோ. நான் குமுதவல்லியை வேற



கேட்கறேன்."
"எனக்கு ஆட்சேபணையில்லை."
குமுதவல்லி பத்மஜாவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோதே
தன் மனதையும் வேடிக்கை பார்த்தாள். அது ஒரு போருக்கு தயாராகிறது.
மனசே மனசை உற்றுப் பார்ப்பது தெரிந்ததும் அந்தப் போர் எண்ணம்
பின்னடைந்தது.
"குமுதவல்லி, என் குழந்தையை உன்கிட்டயே கொடுத்துடறேன். நீ
வளர்க்கறயா" பத்மஜா சர்வசாதாரணமாகக் கேட்டாள்.
"ஏன் பத்மஜா, என்ன திடீர்னு."
"நான் அமெரிக்காவிலிருந்து கிளம்பி வர்றபோது அந்த வரதராஜு
ஒரு கவர் கொடுத்தான். ஏதோ ஃபோட்டோலாக்கும்னு நினைச்சேன.
இல்லை. லெட்டர்.
என்னால அமெரிக்கால தனியா இருக்க முடியலை. வேலையை
விட்டுட்டு இந்தியாவுக்கு வரவும் முடியலை. நீ அமெரிக்கா வந்து என்னைக்
கல்யாணம் பண்ணிக்கறயான்னு கேட்கறான். வரதராஜுலு தெலுங்கு. நான்
தமிழ். வரதராஜுலு ரமா லவ் மேரேஜ். என்னுது அரேன்ஜ்ட் மேரேஜ்.
எங்க ரெண்டுபேர் மேரேஜுமே சிதறிப் போயிடுத்து.
இந்த வரதராஜுவை எனக்குக் கொஞ்சம் தெரியும். நான் இப்படியே
இருக்க விரும்பலை. இன்னொரு கல்யாணம் பண்ணிக்கத்தான் எனக்கு
ஆசை.
மெட்ராஸ்ல எனக்கு யாரும் வாழ்வு கொடுக்க மாட்டா. கொடுத்
தாலும் என் மனசு அமெரிக்காவிலயே இருக்கும்.
எனக்கு வரதராஜுதான் சரியா வரணும்னு தோன்றது. இன்ஷுரன்ஸ்
கம்பெனி காம்பன்ஸேஷன்ல பாதியும், கம்பெனி காம்பன்ஸேஷன்ல பாதியும்
குழந்தை பேர்ல எழுதி வச்சுடறேன்.
எங்க சொந்தக்காரா போட்டி போட்டுண்டு குழந்தையை வளர்க்க
முன்வருவா. ஆனா யாரும் உன்னை மாதிரி, சங்கர்ராமன் மாதிரி உண்மையா
செய்ய மாட்டா.
நீ குழந்தையை வளர்க்கறேன்னா எனக்கு ரொம்ப நிம்மதி. அங்க
நான் சந்தோஷமா இருப்பேன். சட்டப்படி உனக்கு தத்து கொடுத்துடுவேன்.
இன்னென்ன காம்பன்ஸேஷன் தரேன்னு எழுதிக் கொடுத்துடுவேன்.
சொல்லு, குமுதவல்லி."
குமுதவல்லி புருஷனைப் பார்த்தாள். புருஷன் வானம் பார்த்தான்.
"சரி. நான் வளர்க்கறேன். ஆனா இந்தக் குழந்தையை இத்தோட
மறந்துடணும். உன் வழிக்கு உன் வாழ்க்கைக்கு அவளைக் கூப்பிடாது இருக்
கணும்."
"என் வாழ்க்கை அவளுக்கு வேண்டாம்னு தான் குழந்தையை உன்
கிட்ட கொடுக்கறேன், குமுதவல்லி. இப்பவே இங்கயே அவளை விட்டுட்டுப்
போறேன். அவ ரொம்ப அழுதா தாம்பரத்துக்கு போன் பண்ணு."
ஆனால் குழந்தை அழவே இல்லை. அம்மாவைத் தேடவேயில்லை.
"அடி என் பட்டு, அடி என் தங்கம்" குமுதவல்லியின் இரண்டு
பையன்களும் அந்தப் பெண் குழந்தையைக் கொஞ்சினார்கள்.
குழந்தை அந்த இரண்டு பையன்களிடமும் மாறி மாறி தாவினாள்.
இன்னொரு முறை பத்மஜா அமெரிக்கா போய் வந்தாள். கையோடு
வரதராஜுவை அழைத்து வந்தாள்.

தாம்பரத்தில் அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள்.
குழந்தைக்குக் கிட்டத்தட்ட பதினேழு லட்ச ரூபாய் கிடைக்கு
மென்று வரதராஜு சொன்னான். ஆரம்ப வைப்பு நிதியாக ஐந்து லட்ச
ரூபாய் காசோலை கொடுத்தான்.
ராமாவுக்கு சிரார்த்தம் செய்ததால் ஏதேனும் சங்கரராமனுக்குக்
கொடுக்க வேண்டும் என்று விரும்பி ஜீன்ஸ் பேண்ட் மூன்று அளவுகளில்
வாங்கி வந்திருந்தான்.
வாங்கிக்கொள்ளும்படி சங்கரராமனை வற்புறுத்தினான். குமுதவல்லி
யின் பையன்களுக்கு தலா ஒரு லட்ச ரூபாய் பதமஜா தன் அன்பாகக் கொடுத்
தாள்.
குழந்தையை சிறிது நேரம் கட்டிக்கொண்டு விட்டு விடைபெற்றுப்
போனாள்.
அன்று இரவு குழந்தைக்கு லேசாய் ஜுரம் அடித்தது. கனவில் விசும்
பியது.
குமுதவல்லி குழந்தையை இறுக்கக் கட்டிக் கொண்டாள். பாடிஸ்
போடாது வெறும் ரவிக்கை மட்டும் அணிந்து குழந்தையை மார்போடு
அழுத்திக் கொண்டாள்.
குழந்தையைப் பெற்றவள் விமானம் ஏறி ஊர்விட்டு நகர்ந்ததும்தான்
குழந்தைக்கு உடம்பு சரியாயிற்று.
"என்ன...என்கிட்ட தத்துவம் சுத்துண்ட வேளை உனக்கு பொறுப்பு
ஜாஸ்தியாயிடுத்து இல்லையா" சங்கரராமன் கேட்டான்.
"நானா இவளை வளர்க்கப் போறேன். இல்லை என் ரெண்டு பசங்
களை நான் வளர்த்தேனா. அவாளா வளர்ந்தா. வளரப் போறா. வளர்ச்சிக்கு
அனுசரணையா இருக்க முயற்சி பண்றேன்.
மத்தபடி நான் பண்றதா பண்ணப் போறதா எந்த கர்வமும் என்கிட்ட
இல்லை.
"சபாஷ்..." சங்கரராமன் குமுதவல்லியின் உச்சந்தலையில் தன் வலக்
கையை வைத்தான்.
"ஒன்னுக்கு மூணு ஜீன்ஸ் கொடுத்தான்னு சொன்னேளே. அதுல
ஒன்னு என் தம்பிக்கு கொடுங்களேன்."
"மூணையுமே எடுத்துக்கோ."
"ஏன்."
"நம்ம சீதோஷ்ணத்துக்கு ஜீன்ஸெல்லாம் சரியா வராது. வேட்டிதான்
ரைட். வேண்ணா ஒரு விரக்கடை சரிகை போட்டு ஜிலுஜிலுன்னு சரிகை
வேட்டி உடுத்திக்கலாம். அது கூட இப்ப இல்லை. குழந்தை நம்ம வீட்டுக்கு
வந்த நாளை அவ ரெண்டாவது பர்த்டேயா கொண்டாடணும். அன்னிக்
குக் கட்டிக்கறேன்."
அடுத்த வருடம் அவர்கள் அவ்விதமே கொண்டாடினார்கள். அப்பா
வும் இரண்டு பையன்களும் சரிகை வேட்டியில் இருக்க குழந்தை பட்டுப்
பாவாடையில் இருந்தாள். குமுதவல்லி ஒரு சாதாரண சுங்குடிப் புடவையில்
தேவதை போல சிரித்துக் கொண்டிருந்தாள். அந்த உடையில் அவளை
போட்டோ எடுத்துக்கொண்டு பெரிசுபண்ணி ஹாலில் மாட்டினார்கள்.
அந்தக் குழந்தைக்கு குமுதவல்லி ஏனோ ரமா என்று பெயரிட்டாள்.

(முற்றும்)



# வெல்லுங்கள் 3 பாலியஸ்டர் புடவைகளை!

## மேகலா - ஸ்ரீ சுகர் அகத்தியர் நாடி ஜோதிட நிலையம்

## இணைந்து வழங்கும் புகைப்படப் புதிர் போட்டி!



இப்படத்தில் புன்னகை புரியும்
இவன் இன்று நம்மையெல்லாம்
வயிறு வலிக்க சிரிக்க வைக்கும்
நகைச்சுவை நடிகராக வலம் வருபவர்.
இவர் யார் என்பதுதான் கேள்வி! சரியான
விடை எழுதும் வாசகர்களில்
மூன்று பேருக்கு மேகலா - ஸ்ரீ சுகர்
அகத்தியர் நாடி ஜோதிட நிலையம்
இணைந்து வழங்கும் மூன்று பாலியஸ்டர்
சிந்தடிக் புடவைகளை பரிசாகத்
தருகிறோம். விடைகள் வந்து சேரவேண்டிய
கடைசி தேதி : 25-2-98.

ஜனவரி இதழில் கேட்கப்பட்ட கேள்விக்கான சரியான பதில்: நடிகர் விஜய்!

பரிசுபெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகள்:

| | | |
|---|---|---|
| கே.ஜகந்நாதன்<br>9, மூன்றாம் தெரு,<br>நாராயண நகர்,<br>சேலம் - 15. | எம்.அட்சயா<br>C/O.என்.ராமனாதன்<br>13, ஈஸ்வரதாஸ் தெரு,<br>சென்னை - 5. | ஜெ.விஜிலா<br>15, கவரைத் தெரு,<br>வடபழனி,<br>சென்னை - 26. |

முகவரி கூப்பனை வெட்டி ஒட்டி அனுப்பும் விடைகளே பரிசீலனைக்கு
உரியது. கடித உறையின் மீது 'புகைப்படப் புதிர்போட்டி' என்று குறிப்பிடுங்கள்.
விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர்
'மேகலா'
96, காம்தார் நகர்,
மகாலிங்கபுரம். சென்னை - 600 034

இந்த பரிசை உங்களுக்கு வழங்குபவர்கள்
ஸ்ரீ சுகர் அகத்தியர் நாடி ஜோதிட நிலையம்



14, மன்னார் (ரெட்டி) தெரு, (கிருஷ்ணவேணி தியேட்டர் அருகில்)
தி.நகர், சென்னை-17. போன் 43 48 094
74, சத்தி முதல் குறுக்கு தெரு, (GP மருத்துவமனை எதிரில்)
காந்திபுரம், கோவை - 12. போன்: 43 45 74